விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 18 செவ்வாய்க்கிழமை (03.08.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நிபுணர் குழுவுக்கு ஆட்பற்றாக்குறை; விசாரணைகள் தாமதமாகலாம்!

### ஐ.நாவின் செய்திக் குறிப்பில் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அமைத்துள்ள ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகள் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்குத் தேவையான அதிகாரிகள் முழுமையாக நியமிக்கப்படாததே அதற்குக் காரணம் என ஐ.நாவின் செய்திக் குறிப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபை அமைத்துள்ள ஆலோசனைக் குழுவுக்குத் தேவையான அதிகாரிகள் முழுமையாக நியமிக்கப்படாததால் அதன் செயற்பாடுகள் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடு (18 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவைத் தூக்கில் போட சட்டமா அதிபர் முயற்சிக்கின்றார்

### ஜனாதிபதி சட்டத்தரணி குற்றச்சாட்டு


(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, அவரது செயலாளர் என்று கூறப்படும் சேனக டி சில்வா ஆகியோருக்கு எதிரான வழக்குகளை நடத்தாமலேயே அவர்களைத் தூக்கில் போட சட்ட மாஅதிபர் முயற்சிக்கின்றார் என்று இருவரையும் ஆதரித்து நேற்று மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திரந்த வரலியத்த நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

படையினரை விட்டு ஓடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள் என்ற வழக்கு இருவருக்கும் எதிராக நேற்றுக் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

அப்போதே சேனக டி சில்வாவும் பொன்சேகாவும் ஒருவ (18 ஆம் பக்கம் பார்க்க)

# 4 இலட்சம் சிங்கள மக்களை வடக்கில் குடியேற்றத் திட்டம்!



பத்திரிகையாளர் மாநாட்டில் எம்.பிக்கள்

### அரசின் யோசனையை அம்பலப்படுத்தினார் சுரேஸ் எம்.பி.

(கொழும்பு)

வடக்கில் இராணுவம் மற்றும் அவர்களின் குடும்பங்கள் என 4 இலட்சம் பேரைக் குடியேற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத் தகவலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வடக்கின் தற்போதைய இன விகிதாசாரத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விடும் எனவும் அவர் தெரிவித்தார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## தர்சிகா கொலை வழக்கு சிற்றூழியர்களுக்குப் பிணை

(யாழ்ப்பாணம்)

வேலணை வைத்தியசாலை குடும்பநல உத்தியோகத்தர் தர்சிகாவின் உடலின் உள் உறுப்புக்கள் காணாமல் போனமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் இருவரும் தலா 10 ஆயிரம் ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள உறுப்புக்களைக் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறும் நீதிவான் ஆர்.வசந்தசேனன் நேற்று உத்தரவிட்டார்.

இவ் உத்தரவையடுத்து தர்சிகாவின் தந்தை மற்றும் கைதாகி விடுதலையான சிற்றூழியர் ஆகியோ (18 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசாங்கத்திடமிருந்து ஐ.தே.கட்சிக்கு 100 மில். ரூபாய்

### ★ இரகசியத் தகவல்கள் கசிவு ★

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்திய அரசு 100 மில்லியன் இலங்கை ரூபாயை அன்பளிப்பாக வழங்கியுள்ளது என்று தகவல்கள் கசிந்துள்ளன.

ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் 19 ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு சென்றிருந்தார். அப்போதே இப் பெருந்தொகைப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஐ.தே.க. எம்.பிக்கள் பலரும் இந்தியாவின் இந் நிதி அன்பளிப்பு தொடர்பாகக் கட்சித் தலைமைப் பீடத்திடம் கேள்வி கேட்கத் தீர்மானித்துள்ளார்கள்.

எதற்காக இந் நிதி வழங்கப்பட்டிருக்கின்றது? அந்த நிதி கட்சியின் வங்கிக் கணக்கிலா? தனிப்பட்ட ஆட்களின் வங்கிக் கணக்கிலா வைப்புச் செய்யப்பட்டிருக்கின்றது? போன்ற விபரங்களை அவர்கள் கேட்கவுள்ளார்கள்.

இதேவேளை அரசாங்கத்துக்குத் தெரியாமல் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்திய அரசாங்கம் நிதி அன்பளிப்புச் செய்தமை குறித்துச் சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை அரச மட்டத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## திருகோணமலை நகரசபைத் தலைவர் த.தே.கூட்டமைப்பில் இருந்து நீக்கம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரசபைத் தலைவர் சண்முகராசா கௌரி முகுந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை.சேனாதிராசாவிடமிருந்து தனக்குக் கடிதம் கிடைத்துள்ளதாகக் கௌரி முகுந்தன் தெரிவித்தார்.

இதேவேளை தான் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டதன் காரணமாகவே கௌரி முகுந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற திருமலை நகரசபைத் தேர்தலில் த.தே.கூ. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் அந் நகரசபையின் தலைவராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்து கொள்வார்

### அடுத்த மாதம் பயணமாவார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரச உயர்மட்டக் குழுவினர் அடுத்த மாதம் அமெரிக்காவின் தலைநகர் நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார்கள்.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்று முடிந்த இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றன என்று கூறப்படும் யுத்தக் குற்றங்கள் குறித்த ஆலோசனை பெற ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நிபுணர் குழு ஒன்றை அமைத்த பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான உயர் மட்டக் குழு ஒன்று ஐ.நாவுக்கு விஜயம் செய்கின்றமை இதுவே முதற் (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையர்கள் பணியாற்றும் கப்பல் சோமாலியாவில் கடத்தல்

(கொழும்பு)

இலங்கையர்களும் ஊழியர்களாக பணியாற்றும் கப்பலொன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்தியுள்ளதாக சோமாலியாவிலுள்ள ஐரோப்பிய யூனியனின் கடற்படை நேற்று பிற்பகல் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

பனாமா கொடிதாங்கிய எம்.வி.சுயஸ் எனும் இக் கப்பல் சோமாலிய கடற்கொள்ளையர்களின் ஆயுதத் தாக்குதலுக்குள்ளானதாகவும் சில நிமிடங்களின் பின்னர் அக்கப்பலுக்குள் கடற்கொள்ளையர்கள் ஏறியதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலின் பின்னர் அக்கப்பலுடன் தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை எனவும் ஐரோப்பிய யூனியன் கடற்படை தெரிவித்துள்ளது.

17 ஆயிரத்து 300 தொன் எடையுள்ள அக்கப்பலில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஊழியர்கள் உள்ளனர். இக்கப்பல் சீமெந்து பைகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்தது.

அக்கப்பல் தாக்கப்பட்ட போது சர்வதேச ரீதியாக சிபாரிசு செய்யப்பட்ட பகுதிக்கூடாக பயணம் செய்துகொண்டிருந்தது. தாக்குதல் பற்றிய முதல் தகவல் கிடைத்தவுடன் ஹெலிகொப்டர் ஒன்றை அப்பகுதிக்கு அனுப்பிய போதிலும் கடற்கொள்ளையர்கள் ஏற்கனவே கப்பலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமையை அவதானித்து வருவதாக சோமாலியாவிலுள்ள ஐரோப்பிய யூனியனின் கடற்படை தெரிவித்துள்ளது. (ச)

# சியத்த மீது தாக்குதல் நடத்தியோரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

வொய்ஸ் ஒப் ஏஸியா நெட்வேர்க் நிறுவனம் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேக நபர்களை உடனடியாக கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு நேற்று உத்தரவிட்டது.

அத்துடன் சம்பவம் குறித்த விசாரணை அறிக்கையினை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

கடந்த வாரம் குறித்த நிறுவனத்துக்குள் உட்புகுந்த முகமூடி அணிந்த ஆயுத தாரிகள் சிலர் அங்கிருந்த சொத்துக்களை உடைத்து சேதப்படுத்தியதுடன் நிறுவனத்தின் செய்திப் பிரிவில் கடமையாற்றிவந்த இரு ஊழியர்களையும் கடுமையாகத் தாக்கினர்.

இருப்பினும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேக நபர்களை இது வரையில் அடையாள ம் காணப்படவில்லை என்று பொலிஸார் நேற்று நீதிமன்றத்தில் தெரிவித் தனர்.

குறித்த சந்தேக நபர்கள் சம்பவத்தின் போது முகமூடி அணிந்திருந்தமையினால் அவர்களை அடையாளம் காண்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கோட்டை நீதிவானிடம் மேலும் தெரிவித்தனர். (ச)

## உயர் தொழில் நுட்பவியல் நிறுவக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

தெஹிவளை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் வணிக கற்கைப் பிரிவு மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று அந்நிறுவகத்தின் முன்னால் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்கள் மத்தியில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய குறித்த நிறுவகத்தின் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியே இந்தக்கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதனால் தெகிவளை உயர்தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதமடைந்தன. (ச)

# சர்வதேச சமூகத்தின் நல்லுறவே புலிகளை பலவீனப்படுத்த உதவும்

## பேரா.ரொஹான் குணரட்ன சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சர்வதேச சமூகத்துடன் சுமுகமான உறவுகளை பேணுவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் வலையமைப்பை தகர்க்க முடியும் என சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் இன வன்முறை தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வதே சமூகத்தின் கரிசனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துவதன் மூலம் புலிகளை பலவீனப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் அளிக்கப்படுகின்றன என்பதனை புலம் பெயர் தமிழர்கள் உணரும் வகையில் அரசாங்கம்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு வலுவாக காணப்படுகிறது. சட்டவிரோதமான ஆள் கடத்தல் நடவடிக்கைகளை புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் அரசாங்கத்துக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

துரித கதியில் செயற்பட்டு புலிகளின் சர்வதேச வலையமைப்பை தகர்க்காவிட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பெருமளவு பொது மக்கள் உயிரிழந்துள்ளதாக புலிகள் பிரசாரம் செய்துள்ளதாகவும் இதற்கு எதிராக அரசாங்கத் தரப்பினர் வலுவான பிரசாரங்களை முன்னெடுக்கத் தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கிடையில் பிளவு காணப்படுகிறது.

உருத்திரகுமாரன், நெடியவன் மற்றும் இமானுவல் ஆகியோருக்கிடையில் முறுகல் நிலைக் காணப்படுவதாக பேராசிரியர் ரொகான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனிடம் பெருந்தொகையான செல்வம் கொட்டிக்கிடப்பதாக வெளியாகும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

ஐக்கிய நாடுகளுக்கு எதிராக செயற்படுவதன் மூலம் இலங்கை குறித்த சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பில் பாதிப்பு ஏற்படலாம்.

எனவே சர்வதேச சமூகத்துடன் சுமுகமான உறவுகளை பேணு வது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப்படையினர் பொது மக்களை வேண்டும் என்று தாக்கவில்லை எனவும் போராட்டத்தின் போது பொது மக்கள் இழப்புக்களை தவிர்க்கமுடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஆயிரத்து 400 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதே தமது மதிப்பீடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற 13 பேர் கைதாகி நீதிமன்றில் ஆஜர்

கோப்பாய் மற்றும் கல்வியன்காடு பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனையில் ஈடுபட்ட 13 பேர் கைதுசெய்யப்பட்டு யாழ்.நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கோப்பாய் பொலிஸாருடன் இணைந்து யாழ். புறநகர்ப்பகுதிமின்பாவனையாளர்சேவைநிலைய அதிகாரிகள்மேற்கொண்டதிடீர் நடவடிக்கையின் பிரகாரம்இவர்கள்13பேரும்பிடிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் நேற்று யாழ். நீதி மன்றில் நீதிபதி அ.பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா 10 ஆயிரம்ரூபாய்தண்டப்பணமும்மின்சாரசபைக்கு ஏற்பட்டஇழப்புக்குஅமையகுறிப்பிட்டதொகைப்பணத்தையும் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ச)

## ஆசிரியர்கள் சமுகமளிக்கவும்

யாழ். கல்விவலயத்துக்குட்பட்ட 1-எ.பி, 1-சி பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் ஒரு ஆசிரியரும் தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஒருவரும் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு தவறாது சமூகமளிக்குமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ச-3)

## சிமித் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் போட்டி யாழ். சென்றல் அணி காலிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம் பாதுகாப்புப்படை தலைமைச்செயலகமும், யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கமும் இணைந்து நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச்சுற்றுப்போட்டி முதலாவது கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் யாழ்.சென்றல் அணிக்கும், கே.சீ.சீ.சீ. அணிக்கும் இடையில் நடைபெற்றது.

இதில் யாழ்.சென்றல் அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான வி.றஜீவ்குமார், கே.கலிஸ்ரன் ஆகியோரின் முதலாவது விக்கட் இணைப்பாட்டமாக 12 ஓவர்களில் 114 ஓட்டங்களை பெற்றனர்.

இவர்களில் றஜீவ்குமார் 44, கலிஸ்ரன் 54 ஓட்டங்களைப் பெற்றனர்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கே.சீ.சீ.சீ. அணி 20 ஓவர்களில் 139 ஓட்டங்களை பெற்றது.

நிரூஜன் 22, ராகுலன் 30, உமகுமாரன் 35, சபாருக் 21, ஓட்டங்களையும் பெற்றனர்.

றஜீவ்குமார் 2 இலக்குகளையும், விமலகான் 2 இலக் குகளையும், சுபாதீஸ், சவிஸ்ரன் தலா ஒரு விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.



முத்துமாரி அம்மன் ஜோதிட நிலையம்

இந்தியாவில் மந்திராலயத்திலிருந்து வருகைதந்துள்ள பிரபல கைரேகை ஜோதி வல்லுனர்.

ஸ்ரீராம சாஸ்திரி

0775183681, 0775183109

கைரேகை மூலம் துல்லியமாக நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாம நட்சத்திரம், ஜாதகம், கல்வி, உத்தியோகம், தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லட்சுமி வசீகரம், திருமண யோகம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ் திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினை, விஷேட பயணம், எதிரிகள் கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் ஒற்றுமையாக நிலைத் திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல் இவைகள் அனைத்தும் செய்துதரப்படும்.

இவற்றினைத் தெரிந்து கொள்ள ஒருமுறை எங்களைச் சந்தித்துப் பயன் பெறுங்கள்

K.R.V.INN,

252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(நல்லூர் கோவில் முன்பாக)

கைரேகை பார்க்கும் நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை பார்க்கப்படும்

(2068)



போய் கொண்ட கங்கம்மா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை சோதிட வல்லுனர்

கே.ரவிக்குமார் சாஸ்திரி

0770790898

கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடப்பவை மற்றும் நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை, பலன்களை

குறைந்த செலவில் கூறுவார்

துல்லியமாக கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள்

கைரேகை, நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபாரம் விருத்தியடைதல், இலட்சுமி வசீகரம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்துசாஸ்திரம், வீட்டில் வதிவிடப் பிரச்சினைகள், விசேட பயணம், எதிரிகள் கண் திருஸ்டி, கஷ்ட நஷ்டங்கள், கோர்ட் வழக்குகள், வாகனப் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்று கூடுதல்.

இவற்றினை தெரிந்து கொள்ள ஒரு முறை எங்களைச் சந்தித்து பயன் பெறுங்கள்

திலக் லொச் அறை இல: 01

711, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் (யாழ்.இந்துக் கல்லூரி சந்தி)

கைரேகை ஜோதிடம் பார்க்கும் நேரம்: காலை 7.00 மணி முதல் மாலை 6.30 மணிவரை

(2069)

# இன்று ஒரு தகவல்

## இல்லாத ஒன்று

இருட்டு நேரம் ஒருத்தன் விளக்கை கொளுத்திக் கொண்டு வந்தான்.

"என்ன செய்கிறாய்?"என்று கேட்டார் ஒருத்தர்.

"இருட்டை விரட்டிக் கொண்டிருக்கிறேன்"என்றான் அவன்.

"இல்லாத ஒன்றை எப்படி விரட்ட முடியும்?"என்றார் அவர். இவனுக்கு ஒன்றும் புரிவில்லை.

"என்ன சொல்கிறீர்கள்? இருட்டென்பது இல்லாத ஒன்றா?" என்று கேட்டான்.

இதற்கு அவர் விளக்கம் கொடுத்தார்.

இருட்டு என்ற ஒன்று தனியாக இல்லை. வெளிச்சமில்லாத நிலைதான் அது. ஓரிடத்தில் வெளிச்சமாக இருந்தால் வெளிச்சமாக இருக்கிறது என்கிறோம். அந்த இடத்தில் வெளிச்சம் இல்லையென்றால் இருட்டு என்கிறோம்.

ஆக,அந்த இடத்தில் இருப்பதும் இல்லாமல் பேவதும் வெளிச்சம் தான். இருட்டென்று ஒன்று தனியாக ஓடிவந்து உட்கார்ந்து கொள்வதில்லை.

நாம் தான் விளையாட்டுத் தனமாக நினைக்கிறோம். இருட்டு என்று ஒன்று ஏற்கனவே இருப்பதாகவும் வெளிச்சத்தைக் கண்டவுடன் அது ஓடிப் போவதாகவும் நினைக்கிறோம்.

இதில் இருட்டை விரட்டுகிறேன் என்று வீர வசனம் வேறு. வெளிச்சமின்மை தான் இருட்டென்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

நம் மனதுக்குள் 'பயம்'என்று சொல்கிறோம் அல்லவா, அது கூட இருட்டு மாதிரித்தானாம். ஞானிகள் சொல்கிறார்கள்:

வெளிச்சமில்லாமை இருட்டு என்கிறோம் அல்லவா அதேமாதிரித்தான் அன்பு இல்லாமை தான் பயம் என்கிறார்கள் அவர்கள்.

அன்பில்லாத ஒரு நிலைதான் பயம். அன்பு என்ற விளக்கை ஏற்றி வைத்து விட்டால் பயம் என்ற இருட்டு அங்கே இருக்காது.

சூஃபி இலக்கியத்தில் ஒரு சம்பவம் வரும். முல்லா நஸ்ருதீனுக்கு காலையில் தான் திருமணம் நடந்தது. அன்றைக்கு அவரும் அவருடைய இளம் மனைவியும் உறவினர்களுடன் ஆற்றைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

திடீரென்று புயல், வெள்ளம், படகு ஆட ஆரம்பித்தது. எல்லோருக்கும் பயம் வந்துவிட்டது. முல்லாமட்டும் பயமில்லாமல் அவர் பாட்டுக்கு இருந்தார்.

"ஏங்க உங்களுக்குப் பயமாக இல்லையா?"என்று ஆச்சரியத்தோடு கேட்டார் அவருடைய மனைவி.

இதற்கு முல்லா நஸ்ருதீன் பதில் சொல்லவில்லை. இடுப்பில் இருந்த ஒரு கத்தியை எடுத்தார். மனைவியின் கழுத்துக்கு நேராக நீட்டினார். குத்தப் போவது மாதிரி ஓங்கினார். அந்தப் பெண்ணின் முகத்தில் எந்த விதச்சலனமுமில்லை.

இப்பொழுது முல்லா கேட்டார்:"கத்தியென்றால் உனக்குப் பயமாக இல்லையா?"என்றார்.

இதற்கு அவர்,"கத்தி வேண்டுமானால் அபாயகரமானதாக இருக்கலாம். ஆனால் அதைப் பிடித்திருப்பவர் என்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கும் என் கணவர். அதனால் நான் பயப்படவில்லை"என்றார்.

இப்பொழுது முல்லா சொன்னார்:

"அதே மாதிரித்தான் எனக்கும். இந்த அலைகள் வேண்டுமானால் ஆபத்தானதாக இருக்கலாம். ஆனால் இதை ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ் அன்பு மயமானவர். அதனால் எனக்குப் பயம் இல்லை"என்றார்.

அவருக்கு நம்பிக்கை இருந்தது. அதனால் அன்பு இருந்தது. நம்பிக்கையில்லை என்றால் அன்பும் இருந்திருக்காது. அன்பு இல்லையென்றால் பயம் வந்திருக்கும். படகில் இருந்த மற்றவர்கள் மாதிரி அவரும் பயந்து நடுங்கிக் கொண்டிருந்திருப்பார். இந்த உண்மையை நம் வாழ்க்கையிலேயும் பொருத்திப் பார்க்க வேண்டும்.

நமக்குப் பயம் ஏற்படுகிறதென்றால் என்ன அர்த்தம்? நம்மீதே நமக்கு நம்பிக்கையில்லை என்று அர்த்தம்.

பயப்படுபவர்களுக்கெல்லாம் பெரியவர்கள் சொல்லும் அறிவுரை என்ன தெரியுமா?

எதிர்காலத்தைப் பற்றித்திட்டமிடுங்கள் தவறில்லை. ஆனால் எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்ற கற்பனைகளில் பயந்து கொண்டிருக்காதீர்கள். அதனால் உங்கள் மகிழ்ச்சி தான் பாழாகும்.

ஒருத்தர் டாக்டரிடம் வந்தார்.

"டாக்டர்! 15 வருடத்துக்கு முன்னர் ஒருதடவை உங்களிடம் வைத்தியத்துக்கு வந்தேன். காலில் அடிபட்டு வந்தேன். காலில் கட்டுப் போட்டு தண்ணி படாமல் பார்க்கச் சொன்னீர்கள்" என்றார்.

"அதனால் இப்பொழுது என்ன?"என்றார் இவர்.

"இனிமேல் நான் குளிக்கலாமா? என்று கேட்பதற்காக வந்தேன் டாக்டர்"என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய கண் வங்கி அமைப்பதற்கு சிங்கப்பூர் அரசுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

ஆசியப் பிராந்தியத்தின் மிகப் பெரிய இலவசமாகக் கண்களை தானம் செய்யக் கூடிய கண்வங்கி இலங்கையில் அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கப்பூர் அரசாங்கத்திற்கு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்தக் கண் வங்கி அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுகாதார அமைச்சில் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

இதில் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திர ரூபேரு சிங்கப்பூர் கண்வங்கியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை மன்றத்தின் தலைவர் பேராசிரியர் டொனால் டாங் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

மேலும் இலங்கையில் கண் தானத்தை முறையாகவும் திட்டமிட்ட அடிப்படையிலும் மேற்கொள்ள இந்த நாட்டு மக்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது இதன் நோக்கம் என்பதுடன் கண் தொடர்பான விசேட பயிற்சி. அதனுடன் தொடர்புடைய கல்வி என்பனவற்றையும் கண் மாற்று சிகிச்சைகளையும் இங்கு மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிங்கப்பூர் அரசாங்கம் வேறு ஒரு நாட்டுக்கு கண் வங்கி ஒன்றை வழங்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.அத்துடன் இந்தக் கண்வங்கி இலங்கைக்கு மாத்திரமன்றி முழு ஆசிய பிராந்தியத்துக்குமான கண் தான மத்திய நிலையமாக அமையும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (6)

## இராசி பலன்

*03.08.2010*
*(ஆடி 18, செவ்வாய்க்கிழமை)*
*அட்டமி முன்னிரவு 6.55 மணிவரை*
*பரணி பின்னிரவு 2.13 மணிவரை*
*இராகுகாலம் 3.04-4.34 மணிவரை*
*சுபநேரம் 10.34-12.04 மணிவரை*
*மூன்றாம் ஆடிச் செவ்வாய்,*
*அட்டமி - நவமி*

**மேடம்** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான இலாபம் கிடைக்கலாம், பணியில் சிறு மன உழைச்சல் ஏற்படலாம், தெய்வ வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்** பயணத்தால் பலன் கிடைக்கும் நாள், நண்பர்கள் சந்திப்பால் திடீர் விரயம் ஏற்படலாம், இடமாற்றங்கள் தோன்றுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மிதுனம்** மற்றவர்கள் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள், வெளியூர் தொடர்பு அதிகரிக்கும், எதிர்கால வெற்றிக்கு அடித்தளமிடுவீர்கள்.

**கடகம்** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், பாராட்டுக்கள் வந்துசேரும்.

**சிங்கம்** வருங்காலத்திற்கான திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், அலைச்சல் குறைவடையும், வீட்டை அழுகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், பிரயாணங்கள் உருவாகும்.

**கன்னி** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க நேரிடலாம், பிரயாணங்களில் அதிக கவனம் தேவை, ஆலய வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**துலாம்** சுற்றத்தாரின் வருகையுண்டு, எதிர்பார்த்த தொகை வந்து சேரும், வெளியூர் பயணத்தால் ஆதாயம் ஏற்படும், நண்பர்கள் சந்திப்பால் மனமகிழ்ச்சி உருவாகலாம்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், நாள், பொன், பொருள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், திருமண முயற்சி வெற்றி பெறலாம், புகழ் கூடும்.

**தனுசு** பூமியால் இலாபம் கிட்டும், இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரலாம், ஆலய செயற்பாடுகளில் அக்கறை காட்டுவீர்கள், பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**மகரம்** பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், அதிஷ்டகரமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டும் நாள், நீண்ட நாளைய பிரச்சினை ஒன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மீனம்** பணவரவு திருப்தி தரும் நாள், பக்க பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

வளவன்

### தரம் 6 கணித விஞ்ஞான ஒலிம்பியாட்

# தேசிய மட்ட செயற்றிட்ட பயிற்சி நெறிக்குத் தெரிவானோர்

யாழ்ப்பாண கல்வி வலய பயிற்சி நிலையத்திலும் வவுனியா வலய பயிற்சி நிலையத்திலும் நடைபெற்ற தரம் 6 ற்கான கணித விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களில் வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற தெரிவுப் பரீட்சையில் தேசிய மட்ட செயற்றிட்ட பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரம் வருமாறு,

**கணிதம்**

அலெக்ஸ்சாண்டர் கஸ்ரோ டிரோன் (புனித பத்திரிசியார் கல்லூரி), புஸ்பாகரன் பிருந்தாபன் (விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி), ரவிச்சந்திரன் தவதஞ்சா (இறம்பைக்குளம் ம.வி)

**விஞ்ஞானம்**

பரமானந்தம் கஸ்தூரி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), பாலச்சந்திரன் அபியுக்தன் (வவுனியா தமிழ் ம.வி), இராஜசேகரன் தாக்சாஜினி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), மேற்படி மாணவர்களுக்கான பயிற்சி நெறி ஓகஸ்ட் 9 முதல் 13 வரை மாதம்பே சேனநாயக்க ம.வியில் நடைபெறுவதுடன் பின்னர் நடைபெறவுள்ள தேசிய மட்டப் பரீட்சையிலும் பங்கு கொள்ளவுள்ளனர். இவர்களுக்கான அறிவுறுத்தல் கடிதங்களை யாழ் வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பெற்றுக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (4)

# க.பொ.த (உ/த), புலமைப்பரிசில் பரீட்சைகளில் தோற்றவுள்ள முல்லை. மாவட்ட மாணவர்களுக்கு

இம்மாதம் நடைபெறவுள்ள க.பொ.த (உயர்தரம்) மற்றும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றவிருக்கும் முல்லைத்தீவு மாவட்டப் பரீட்சார்த்திகளின் நலன் கருதி ,பரீட்சை நிலைய விபரங்கள் யாவும் வட மாகாணத்திற்குட்பட்ட 12 வலய கல்வி அலுவலகங்களிலும் யாழ்ப்பாணம், வவுனியாமேலதிக மாகாண கல்வி பணிமனைகளிலும் விபரப் பலகைகளில்காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகள் தமக்குரிய சரியான பரீட்சை நிலையத்தை அறிந்து பரீட்சைக்குத் தோற்றுமாறு முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் நா.தேவேந்திரன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரம் தேவைப்படின், 0770523105 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 60 |
| உருளைக்கிழங்கு | 50-60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 100-120 | 140 | 110 |
| தக்காளி | 60 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 |
| கோவா | 60 | 70 | 60 |
| கரட் | 140 | 140 | 110 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 20 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 90 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60-80 | 100 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 90 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 70 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



பாடசாலை ரீதியாக நேற்று மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் நல்லூர் விக்னேஸ்வரா வித்தியாலயம், நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம், யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் தங்களது பாடசாலையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

துளசிதாசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி டயமண்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் எதிர்பொதிகை விநாயகர் விளையாட்டுக்கழகமும், மாலை 4.30 மணிக்கு கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகம் எதிர் ஆதிசக்தி B விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

நாளை புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் எதிர் சிவானந்தா விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் எதிர் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெற்று ஆடிப்பூரத்தன்று நிறைவுபெறவுள்ளது.

இத்திருவிழாக்காலங்களில் தினமும் மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சி.வை. நித்தியானந்தசர்மா ''தேவிமகாத்மியம்'' பற்றி தெய்வீகத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (4)

✠✠✠

(பொலிகண்டி)

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திர காளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

வேட்டைத் திருவிழா 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கும், கந்தவனச் சமுத்திரத்தில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழா 12 ஆம் திகதி காலை 8 மணிக்கு நடைபெறும்.

ஒவ்வொரு நாளும் பகல் திருவிழா காலை 9 மணிக்கும், மாலைநேரத் திருவிழா இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி அம்பாள் வீதி உலா வருவார். (2)

## பரு. பிரதேச செயலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(அல்வாய்)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சக்கோட்டை, அல்வாய், பொலிகண்டி தெற்கு, சுப்பர்மடம் ஆகிய பிரிவுகளில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டோரில் இதுவரை 5 பேர் மரணமடைந்துள்ளார்கள்.

இப்பகுதி பருத்தித்துறை சுகாதார திணைக்களத் தொண்டர்கள் வீடுகளுக்குச் சென்று காணிகளை பார்வையிடுவதுடன், நுளம்புப் பெருக்கத்திற்கான காரணங்கள் இக் காணிகளில் காணப்படுமாயின் அவற்றிற்கான நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய பற்றைகள் மற்றும் துப்புரவற்றுக் காணப்படும் காணிகள் உள்ள வீடுகளுக்கு சிவப்புநிற ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு வருவதோடு 14 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு, துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்தல் விடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பற்றைகள் அற்று துப்புரவாகக் காணப்படும் காணிகள் உள்ள வீடுகளுக்கு பச்சைநிற ஸ்ரிக்கரினால் அடையாளமிடப்பட்டு வருவதாக பருத்தித்துறை சுகாதார பரிசோதகரினால் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனுக்குத் தெரிவிக்கப் பட்டது. (2-19)

## பரீட்சைப் பணியாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சேகரிப்பு நிலையம் , யாழ்ப்பாணம்-11 இற்குட்பட்ட வலிகாமம் கல்வி வலயம், வடமராட்சி கல்வி வலயம், கோப்பாய் கல்விக்கோட்டம் என்பவற்றைச் சேர்ந்த பரீட்சைக் கடமையில் ஈடுபடும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சை கடமைக்கு நியமிக்கப்பட்ட இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், உதவி இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் தவறாது உரிய நேரத்திற்கு இக் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (4)




## அதிபர், ஆசிரியர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

ICDL கணனிப் பயிற்சியைக் கற்க விரும்பும் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர் கள், ஆசிரியர்கள் ஆகியோர் தமது பெயர்களை யாழ். கல்வி வலய அபிவிருத்திப் பிரிவில் நாளை புதன்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளுமாறு, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (2)

## குருநகர் பகுதிக்கு இன்று நீர் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குரித்தான குருநகர் தாங்கியில்திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், இன்று செவ்வாய்க்கிழமை குருநகார் பகுதிக்கான நீர் விநியோகம் தடைப்படும் என யாழ். மாநகர சபை நீர் வேலைப் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (6)

## எவ்வித முன்னறிவித்தலுமின்றி மின்சாரம் துண்டிப்பு

### மக்கள் விசனம்

(கைதடி)

கைதடிப் பகுதியில் கடந்த சிலநாட்களாக எவ்வித முன்னறிவித்தலுமின்றி மாலை நேரங்களில் மின்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது கல்வி மீட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்படுகின்றனர். இதனால் இப் பகுதி மக்கள் தமது கடமைகளை திட்டமிட்டு நடாத்த முடியாதுள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனமெடுத்து சீரான மின்சாரத்தை வழங்க ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு மாணவர்களும் மற்றும் பெற்றோர்களும் கேட்டுக்கொள்கின்றனர். (6-2)

## தேசிய சக்திவாரப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ள மாணவர் விபரம்

(அல்வாய்)

சக்திவலு அமைச்சின் கீழுள்ள இலங்கை நிலைத்திருக்கக் கூடிய சக்தி அதிகார சபையினால் தேசிய சக்தி வாரம் இன்று தொடக்கம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் தேசிய மட்டத்தில் கொண்டாடப்படவுள்ளது.

கடந்த மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற மாகாணமட்ட தேசிய சக்தி வாரப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான தேசிய மட்டப் போட்டிகள், பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 6ஆம் இலக்க அறையில் நாளை புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் கீழே பெயர் குறிப்பிடப்படும் மாணவர்கள் வட- மாகாணம் சார்பாக போட்டியிடவுள்ளனர்.

தத்தம் வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களை போட்டியில் பங்குபற்றுவதற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வினாவிடைப் போட்டிக்குத் தெரிவான மாணவர்களான, ச.வேணிலன் (யா/ மகாஜனாக் கல்லூரி), ந. பிரணவரூபன் (யா/ இந்துக் கல்லூரி), சீ.நாகதீசன் (வவு/ தமிழ் ம.ம. வித்தியாலயம்), சி. சக்திதாசன் (யா/ ஹாட்லிக் கல்லூரி),பா. கபிலன் (யா/ ஹாட்லிக் கல்லூரி), ப.தோ.சர்மிளா (யா/மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலை) ஆகியோரும்

புதிய கண்டுபிடிப்புப் போட்டிக்குத் தெரிவான ஞா. தனுசன் (யா/ வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரையும் தவறாது பங்குபற்றச் செய்யுமாறு வடமாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் கேட்டுள்ளார். (2-19)

## சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(அச்சுவேலி)

வலி-கிழக்கு பிரதேச செயலகத்தின் கிராமசேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட இடங்களில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறி வருகின்றனர்.

இவர்களில் வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த தரம் 8, 9, 10 களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கான படிவங்கள் பூர்த்தி செய்யும் பணிகளை அப்பகுதி சமுர்த்தி சமூக அபிவிருத்தி அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். (2)
















15 வருடத்திற்குப் பின்பு குருநகர் கடற்கரை வீதி மீண்டும் பொதுமக்கள் பாவ னைக்காக நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.எஸ்.சந்திரசிறி வீதிக்கான பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதையும் ஆளுநர், யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி கத்துறுசிங்க ஆகியோர் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அடுப்புகளை வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மீண்டும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர் ஒருவர் அண்மையில் தன்னைத் தானே தீ மூட்டிக் கொண்டதைத் தொடர்ந்து கட்சி மட்டத்தில் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் நான்கு பேர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இந்த குழு பல சந்திப்புக்களை மேற்கொண்டுள்ள நிலையில் மீண்டும் இன்று ஒன்று கூடி பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய தலைமையிலான இந்த குழுவில் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான காமினி ஜெயவிக்ரம் பெரேரா மற்றும் ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கட்சியில் தற்போது எழுந்துள்ள பல்வேறு பிளவுகளை தீர்க்கும் வகைகளில் வெவ்வேறு கருத்துக்களுடன் உருவாகியுள்ள குழுக்களுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த சிரேஷ்ட தலைவர்களின் குழுவில் கட்சியின் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ உள்வாங்கிக் கொள்ளப்படாமை தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

அத்துடன் சஜித் பிரேமதாஸாவிற்கு தலைமைப்பதவி வழங்கப்படவேண்டுமென கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மீண்டும் வலியுறுத்தியுள்ளதுடன் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கட்சியின் சிரேஸ்ட தலைமைப்பொறுப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

மஹரவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமக்குதாமே தீ மூட்டி தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு கட்சியில் பிரச்சினைகள் ஏற்படவில்லை எனவும் எதிர்காலத்தில் கட்சி பிரச்சினைகளின் போது உயிர்த்தியாகம் மேற்கொள்ள பலர் தயாராக இருக்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## தேசியக்குற்றவாளிகளாக 40 ஆயிரம் பேர் பதிவு

(கொழும்பு)

தேசிய குற்றவியலாளர் பதிவு பட்டியலில் சுமார் 40 ஆயிரம் பேர் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பட்டியலில் கொலை, கொள்ளை, பாலியல் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் உள்வாங்கப்படுகின்றனர்.

வருடா வருடம் பொலிஸாரினால் தயாரிக்கப்படுகின்ற இந்தப் பட்டியலில் ஒரு வருடத்துக்கு சராசரியாக 100 பேர் வரையில் உள்வாங்கப்படுவதாக பொலிஸார் கவலை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு உள்வாங்கப்படுகின்றவர்களில் அதிகமானவர்கள் 20 தொடக்கம் 35 வயதுடையவர்களென தெரிவிக்கப்படுகிறது.

இதில் உள்வாங்கப்படுகின்றவர்கள் தேசிய ரீதியாக குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுவர் என்றும் இந்த நிலையில் அவர்களை கைது செய்து சிறையில் அடைக்க முடியும் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (6-2)

## கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை கண்காணிக்க சீன நிபுணர்குழு வருகை

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை கண்காணிக்க சீன அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் உள்ளிட்ட நிபுணர்கள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

கண்ணி வெடிகளை அகற்றும் தேசிய வேலைத்திட்டத்தின் அதிகாரிகளோடு இவர் கள் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதேச அபிவிருத்தி பிரிவின் மேலதிக செயலாளர் மெகால் தோமஸ்ரீ சீன வெளி விவகார அமைச்சின் பிரதிப்பணிப்பாளர் சென்ஜி.சி.ஆகியோரின் தலைமையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

வடக்கு -கிழக்கு மாகாணங் களில் உள்ள கண்ணிவெடிகள், வெடிக்காத குண்டுகள் ஆகியன காணப்படும் இடங்கள் இனம் காணப்பட்டு 1500 சதுர கிலோமீற்றர் நிலப் பரப்பில் உள்ள கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட ரணதுங்க தெரிவித்தார்.

மேலும் 24ஆயிரம் சதுரகிலோமீற்றர் பகுதியில் கண்ணி வெடிகள் உள்ளதாக தெரியவந்துள்ளது. இங்குள்ள கண்ணி வெடிகளை அகற்றும் நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் கண்காணிப்பில் முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைய சிறப்பான முறையில் அமுல் படுத்த கண்ணிவெடிகளை அகற்றும் பணியகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. (6)

**பனை அபிவிருத்தி சபையின் 32ஆவது ஆண்டு விழாவும்**
**சபையின் முதலாவது தலைவர்**
**அமரர்.கே.சி.நித்தியானந்தா அவர்களின் நினைவு விழாவும்**

பனை அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.பசுபதி சீவரத்தினம் அவர்களின் தலைமையில் பனை அபிவிருத்தி சபையின் 32ஆவதுஆண்டு விழாவும்.சபையின் முதலாவது தலைவர் அமரர்.கே.சீ.நித்தியானந்தா அவர்களின் நினைவு விழாவும் 07.08.2010ஆம் திகதி சனிக்கிழமை பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சமாசத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதன் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ்தேவானந்தா அவர்கள் கலந்து கொள்வார்கள் இவ்வைபவத்திற்கு சகலரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்தி சபை.

(C-795)

# யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம்

வடக்கு மாகாணத்தில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி வலயத்தில் இருந்து யாழ்ப் பாண வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி ஏ.அனிதா (கிளிநொச்சி மகா வித்தி), செல்வி என்.ஆன்புனிதா ஜெயந்தி (கிளி. இராமநாதபுரம் மகாவித்தி),திருமதி எஸ்.அனுசுயா(கிளி.வேம்பெடுகேணி சி. சி. ரி.எம்.எஸ்.),திருமதி கே. அருந்ததி (கிளி. திருவையாறு மகாவித்தி.

கிறிஸ்ரபிள் ஜஸ்ரின் பிறிஸ்சிலி (கிளிநொச்சி இந்துக்கல்லூரி),ஈ.சண்முகநாதன் (கிளி.நாகேஸ்வரா வித்தி),திருமதி எஸ்.கலையரசி (கிளி.இராமநாபுரம் ஜி.ரி.எம்.எஸ்.), திருமதி ஆர் .கலாநாயகி (கிளி.கறுக்காத்தீவு மகாவித்தி),செல்வி சி.கமலாதேவி (கிளி.ஜெயபுரம் மத்திய வித்தி).

திருமதி பி.கனகராணி (கிளி.பூநகரி மகா வித்தி,திருமதி எஸ்.கனகேஸ்வரி (கிளி.பத்மநாதன் இ.ம.வித்தி,திருமதி ரி.கிருஸ்ணவேணி (கிளி.திருவையாறு மகாவித்தி), திருமதி என். கோகுலவாணி (கிளி.கனகாம்பிகைக் குளம் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி ஏ. கிருதா கௌரி (கிளி.இராமநாதபுரம் மகாவித்தி, செல்வி எம்.மகேஸ்வரி (கிளி.சென் பாத்திமா றோ.க.வித்தி, திருமதி எம்.மாலினி (சென்.திரேசா எல்.சி),திருமதி பி.மஞ்சுளா (சென். பாத்திமா ஆர்.சி. எம். வித்தி), திருமதி எஸ்.மதிவதனா (கனகபுரம் மகா வித்தி.

திருமதி ஆர்.நளினி (சென் .திரேசா ஜி.சி), திருமதி ரி.புஸ்பநாயகி (சென். பாத்திமா றோ. க. த.க.பா),திருமதி கே. ராகினி (பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி, வண. சகோதரி ஏ.டி. அமிர்தா (கிளிநொச்சி மகா வித்தி, எஸ்.லோகேந்திரன் (கனகாம்பிகைக்குளம் ஜி.ரி.எம். எஸ்), திருமதி எஸ். சிவநாதன் (ஞானிமடம் ஆர்.சி.ரி.எம்.எஸ்).

திருமதி எஸ்.சாயி ஜனனி வேம்பெடுகேணி சி.சி.ரி.எம்.எஸ்),திருமதி எம்.சந்தான லட்சுமி (கல்மடுநகர் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி ஆர். சரஸ்வதி (கறுக்காய்த்தீவு மகாவித்தி), திருமதி கே. சத்தியதேவி (இராமநாதபுரம் மகாவித்தி), எஸ்.விக்னேஸ்வரநாதன் (கிளி. பண்ணா கண்டி ஜி.ஏ.எச்.ரி.எம்.எஸ்),திருமதி ஆர்.செல்வராணி (திருவையாறு மகாவித்தி), திருமதி கே. சாந்தினி (மாயவனூர் ஜி.ரி.எம். எஸ்), திருமதி எம்.சியாமளா (பாரதி வித்தியாலயம்),திருமதி எ.சோமினா (பளை மத்திய கல்லூரி), திருமதி எஸ்.சுதர்மதி (வட்டக்கச்சி மகா வித்தி),செல்வி என்.தர்மமாலினி (குமாரசாமி புரம் ஜி.ரி.எம்.எஸ்).

திருமதி எல். திருமகள் (இராமநாதபுரம் மகாவித்தி),திருமதி பி.வசந்தமலர் (கிளிநொச்சி மத்தியகல்லூரி), திருமதி என்.வசந்தி (கிளிநொச்சி மகாவித்தியாலயம்),திருமதி எஸ்.வாசுகி (புதுமுறிப்பு விக்னேஸ்வரா), செல்வி ஐ.யசிந்தாதேவி (நாச்சிக்குடா ஜி.ரி. எம்.எஸ்). செல்வி பி.புஸ்பராணி (கிளி.கனகபுரம் ம.வி).

**மடுவலயத்திலிருந்து யாழ்ப்பாண வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர் பெயர் விபரம் வருமாறு,**

செல்வி என் கௌரீஸ்வரி (மன்.பரப்புக் கடந்தான் ஜி.ரி.எம்.எஸ்).

**மன்னார் வலயத்தில் இருந்து யாழ்ப் பாண வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

கே.சண்முகநாதன் (மன்.அல்.அசார் மகா வித்தி),எம்.கணேசானந்தன் (மன்.சென். சேவியர்ஸ் பெண்கள் கல்லூரி), திருமதி எம். மீராதேவி (மன்.கற்கடந்தகுளம் ஆர்.சி.ரி. எம்.எஸ்).

**முல்லைத்தீவு வலயத்தில் இருந்து யாழ்ப்பாண வலயத்திற்கு இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி எஸ்.அருள்மொழி(முல்லை வள்ளிபுனம் ஜெ.எஸ்.வி),திருமதி ஆர்.சித்ரா (முல்லை புதுக்குடியிருப்பு சி.சி),திருமதி டி.தேவராணி (முல்லை வற்றாப்பளை மகாவித்தி), திருமதி எம்.ஜமுனா (முல்லை விஸ்வமடு மகா வித்தி),திருமதி என்.கஸ்தூரிபாய் (முல்லை வள்ளிபுனம் யூ.எச்.வி),திருமதி ஆர்.மேரி சசிகலா (முல்லை வேணவில் ஸ்ரீமுருகானந்தா வித்தி), திருமதி கே. நாகநளினி (முல்லை விஸ்வமடு மகாவித்தி),திருமதி எஸ்.பரமேஸ்வரி (முல்லை புதுகுடியிருப்பு மகாவித்தி.

செல்வி எம்.புவினேஸ் (முல்லை தேரங் கண்டல் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி ஆர்.புவனேஸ்வரி (முல்லை விஸ்வமடு மகாவித்தி,திருமதி எம்.ரூபா கௌரி(முல்லை தேவிபுரம் ஜி.ரி. எம்.எஸ்),திருமதி கே. சாந்தகுமாரி (முல்லைத் தீவு மகாவித்தி, திருமதி ஜெ.சுகந்தா (முல்லை. தேவிபுரம் ஜி.ரி.எம். எஸ்),செல்வி எம்.சுகந்தினி (முல்லை. புதுக்குடி யிருப்பு சி.சி),திருமதி ரி.உதயசிறி(முல்லை. உடையார்கட்டு மகா வித்தி.

**துணுக்காய் வலயத்திலிருந்து யாழ்ப் பாண வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்களின் பெயர் விபரம் வருமாறு,**

ஏ.பொன்வாசன் (முல்.பெரியபுளியங் குளம் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி ஜி.பத்மநாதன் (துணுக்காய் வலய கல்வி அலுவலகம்), ஜி.சதீஸ் குமார் (மல்லாவி.சி.சி), செல்வி ஆர்.ஜெயராணி (முல்.மாங்குளம் மகாவித்தி), கே.பத்மநாதன் (வன்னிவிளாங்குளம் ஜி.ரி. எம்.எஸ்), திருமதி கே. சத்தியசீலன் (முல். மல்லாவி சி.சி).

செல்வி எஸ்.கமலாதேவி (புத்துவெட்டுவான் ஜி.ரி.எம்.எஸ்), திருமதி எம்.கலைச் செல்வி (யோகபுரம் மகாவித்தி), திருமதி ஜி. லியோனா மியூரி (முல். மல்லாவி சி.சி), திருமதி ஏ.மலர்விழி (முல்.மல்லாவி சி.சி), எஸ். சத்தியசீலன் (முல்.விநாயகபுரம் ஜி.ரி.எம். எஸ்), திருமதி எஸ்.சர்வமாலா (முல். கற்சிலை மடு ஜி.ரி.எம்.எஸ்), திருமதி என்.சத்தியபாமா (துணுக்காய் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி ஜி.சிவமணி (முல்.கொற்றாய் கட்டியகுளம் ஜி.ரி.எம்). என்.சிவசக்தி ( முல்.தேரன் கண்டல் ஜி.ரி. எம்.எஸ்).

ரி.யுகேஸ்( முல். ஒலுமடு ரி.வி), திருமதி. எ.தனுசியா (முல். யோகபுரம் மகாவித்தியாலயம்),திருமதி.பி.தவலக்சுமி (முல். மூன்று முறிப்பு ஜி.ரி.எம்.எஸ்),வி.கமலேஸ்வரன் (முல்.கற்சிலை மடு ஜி.ரி.எம்.எஸ்), செல்வி. எஸ்.விஜிதாம்பாள் ( முல். யோகபுரம் மகா வித்தியாலயம்).

**வவுனியா வடக்கு வலயத்திலிருந்து யாழ்ப்பாண வலயத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

எஸ்.குலரத்னா (வவு, சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்),எஸ்.ஸ்ரீரூபன் (வவு.பம்பைமடுஜி.ரி.எம்.எஸ்)

**கிளிநொச்சி வலயத்திலிருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

கே.முரளிதரன் (கிளி.தருமபுரம் ஜி.ரி.எம். எஸ்),திருமதி.எ. கார்மேல்தவராணி ( கிளி. மாஷார் ஜி.ரி.எம்.எஸ்) திருமதி.வி.லோஜினி (கிளி. வட்டக்கச்சி மகாவித்தி),செல்வி என். மனோராணி (தருமபுரம் மகாவித்தி),திருமதி ஜெ.மேரிலுர்தநாயகி (கிளி.ஊற்றுப்புலம் ஆர். சி. ரி.எம்.எஸ்), திருமதி.பி.மதனகௌரி ( கிளி மத்திய கல்லூரி), திருமதி எம்.மிருனாளினி ( (கிளி. இராமநாதபுரம் மகாவித்தி), திருமதி.எம். பிரேமினி (கிளி .கல்மடுநகர் ஜி.ரி.எம்.எஸ்).

திருமதி.ரி.இராஜேஸ்வரி (கிளி. பளை சி.சி), திருமதி.ஆர்.ரணிதா (கிளி.கனகபுரம் மகா வித்தி,செல்வி எஸ். ரஞ்சினிதேவி (கிளி. தருமபுரம் மகா வித்தி.

திருமதி எம்.ரேணுகா (கிளி.கனகாம்பிகை குளம் ஜி.ரி.எம்.எஸ்),எஸ்.புஸ்பராசா (கிளி. பாரதி வித்தி,திருமதி எஸ்.செல்வராணி (கிளி . பாரதி வித்தி,திருமதி பி.சிவானந்தி (கிளி. முழங்காவில் ம.வி),ரி.பிரதாப் (கிளி.சிவபாத கலையகம்ஜிரிஎம்.எஸ்),பிவளர்மதி(கிளி.கனகபுரம்ம.வி).

**மடுவலயத்தில் இருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

செல்விஎம்.கௌரி(மன்னார் அடம்பன்ம.வி), கே. அன்ரன் சிங்கராஜா(மன். வெள்ளாங் குளம் ஜி.ரி.எம்.எஸ்).கே.மனோகான் (மன்.அடம்பன் ம.வி.),திருமதி எஸ்.ரஞ்சனா (மன். ஆத்தி மோட்டை ஜி.ரி.எம்.எஸ்), கார்மேகவண்ணன் (மன்.தட்சனா மருதமடு ஜி.ரி.எம்.எஸ். ),எஸ். சிறிகாந்தசேகரம் (மன்.சின்னவலயங்கட்டு ஜி.ரி.எம்.எஸ்).

சி.சிவனேஸ்வரன் (மன்.தேவன்பிட்டி ஆர். சி.ரி.எம்.எஸ்),செல்வி எஸ்.சுகந்தி (மன்.அடம்பன் ம.வி.),என் துஷ்யந்தன் (மன். அல்.அசார் வித்தி.

**முல்லைத்தீவில் இருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

ஏ.குகனேசன் (முல்.முல்லைத்தீவு ம.வி), திருமதி பி.பாரதி (முல்.நெத்தலியாறு ரி.வி), திருமதி கே. கிருஸ்ணலதா (முல்.உடையார் கட்டு ம.வி),திருமதி ஜெ.நேசமலர் (முல். புதுக் குடியிருப்பு சி.சி), திருமதி ஐ.சிவமணி (முல். தேவிபுரம் ம.வி),திருமதி எஸ்.ஸ்ரீலக்சுமி (முல். பாரதிவித்தி,திருமதி ஜி.வசந்தராணி (முல்.விஸ்வமடு ம.வி).

**துணுக்காய் வலயத்தில் இருந்து வடமராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

எஸ்.ஜெகப்பிரதாபன் (முல்.முத்தையன் கட்டு ஆர்.சி.ரி.எம்),திருமதி ஏ.உருத்திராதேவி (முல்.கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ்),திருமதி ஆர். உதயமலர் (முல்.துணுக்காய் ஜி.ரி.எம். எஸ்),திருமதி கே. வசந்தமலர் (முல்.மல்லாவி சி.சி).

**வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து வடமராட்சி வலயத்திற்கு இட மாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் வருமாறு,**

திருமதி ஆர்.சர்மிளா (வவுனியா சிதம் பரம் ஸ்ரீநாகராஜா வித்தி.

**கிளிநொச்சி வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

திருமதி கே. பார்வதிதேவி (கிளி .திருவையாறு ம.வி),திருமதி ரி.சந்திரபவானி (கிளி.பூநகரி ம.வி),ரி.கீதா (கிளி .கனகபுரம் ம.வி), திருமதி எஸ்.ஞானமலர் (கிளி .நாச்சிக்குடா ஜி.ரி. எம்.எஸ்),திருமதி கே.ஹேமகேசினி (கிளி . கனகபுரம் மத்திய வித்தி,திருமதி ஜெ.கலைவாணி (கிளி.ஜெயபுரம் ம.வி).

செல்வி ஜெ.மலர்வேணி (கிளி.முகாவில் ஜி.ரி. எம்),திருமதி எஸ்.மணிமாலா (கிளி. ஜெயபுரம் ம.வி), திருமதி எஸ்.மிருனாளினி (கிளி. சென் பாத்திமா ஆர்.சி.ரி.எம்.எஸ்),என்.செல்வராசா (கிளி.ஜெயப்புரம் ம.வி),பி.சுதாகரன் (கிளி.பிரமந்தனாறு ம.வி).

ஆர்.சங்கரன் (கிளி.கனகாம்பிகை குளம் ஜி.ரி.எம்.எஸ்),எஸ்.ஜீவானந்தன் (கிளி.கனக புரம் ம.வி),திருமதி எஸ்.சறோஜினிதேவி (கிளி. புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தி,திருமதி எஸ்.சங்கரி (கிளி.சென்திரேசா மகளிர் கல்லூரி), திருமதி ஐ.சின்னத்துரை (கிளி.கனகபுரம் ம. வி), செல்வி பி.சுபாமா (கிளி.தருமபுரம் ம.வி), திருமதி எஸ்.தேவராஜனா (கிளி.கனகபுரம் ம.வி)

செல்வி.எம்.திலகவதி(கிளி. கனகாம்பிகைக் குளம் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி வை. திவ்வியன்னாமலர் (கிளிநொச்சி சி.சி),திருமதி வி.உமாதேவி (கிளி.தர்மபுரம் ம.வி),திருமதி வி.வசந்தாதேவி(ஸ்கந்தபுரம் இல1 ஜி.ரி.எம்.எஸ்), திருமதி ஜெ.விஜயசாந்தினி (கிளி.இந்துக் கல்லூரி).

**மடு வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர் பெயர்விபரம் வருமாறு,**

திருமதி பி.பங்கயவதனி (மன். பெரியபண்டிவிரிச்சான் ம.வி).

**மன்னார் வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

கே. சிறிரஞ்சித் (மன் .முருங்கன் ம.வி), திருமதி ஜெ.சாம்பவி (மன்னார் காளி தேவி ஜி.ரி. எம்.எஸ்).

**முல்லைத்தீவு வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி யூ.ஜெயக்கலா (முல்லைத்தீவு இந்து தமிழ் வித்தியாலயம்),கே. செபமாலை (முல்லைத்தீவு மந்துவில் அரசரத்தினம் வித்தி), எஸ்.உதயசீலன் (முல். அலம்பில் ஆர்.சி.ரி.வி),எம்.சுதர்சினி (முல். இரணைமடு ரி.வி),ரி.கஜேந்திரன் (முல்.பெரிய புளியங் குளம் ஜி.ரி.எம்.எஸ்),வி.உதயகுமார் (வள்ளி புலம் ஜி.ரி.எம்.எஸ்)

**துணுக்காய் வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி ஜி.அனுசியா (முல்.யோகபுரம் ம.வி),திருமதி எஸ்.ஜெயநிதி (முல்.தேரம் கண்டல் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி எஸ்.பரிமளம் (முல். அனிச்சயன் குளம் ரி.ம.வி),திருமதி கே. சந்திரலதா (முல் .திருமுருகண்டி இந்து வித்தி,செல்வி.பி.சசிராஜினி (முல். கரிப்பட்டம் முறிப்பு ஜி.ரி.எம்.எஸ்),திருமதி யூ.சுபாசினி (முல் .கற்சிலைமடு ஜி.ரி.எம்.எஸ்), திருமதி எஸ்.வசந்தகுமாரி (முல்.பாலிநகர் வித்தி.

**வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இட மாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி எஸ்.ஜனதா (வவு.பூம்புகார் கண்ணகி வித்தி,திருமதி ரி.காசிநாதர் (வவு.மரவுலுப்பை ஜி.ரி.எம்.எஸ்)

**வவுனியா தெற்கு வலயத்தில் இருந்து வலிகாம வலயத்திற்கு இட மாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வரு மாறு,**

செல்வி.வி.புஸ்பராணி (வவு. பெரிய கோமரசன் குளம் ம.வி),கே. அருட்கரன் (வவு.த.ம. வி.

**கிளிநொச்சி வலயத்தில் இருந்து தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

திருமதி வி.கேசினி (கிளி.இராமநாதபுரம் வித்தி,திருமதி கே. மஞ்சுளா (கிளி.பூநகரி ம.வி),திருமதி ஜெ.மேரி மார்க்கிறேட் ஏஞ் செஸ் (கிளி.தென் திரேசா மகளிர் கல்லூரி), திருமதி கே. நந்தகுமாரி (கிளி.இரணைதீவு ஜி.ரி.எம். எஸ்), திருமதி ஆர்.நந்தகுமாரி (கிளி.மாஷார் ஜி.ரி. எம்.எஸ்).

திருமதி ஜெ.ரஜனி (கிளி.பரந்தன் எச்.எம். வி.), திருமதி ஆர். ராணி மலர் (கிளி. வட்டக் கச்சி மத்திய வித்தி, எஸ் தனபாலசிங்கம் (கிளி.புது முறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்),திரு.ரி.அபராஜிதன் (கிளி. பண்ணாங் கண்டி எச்.ரி. எம்.எஸ்), திருமதி.ஜி.தயாநிதி (கிளி.மாஷர் ஜி.ரி.எம்.எஸ்),திருமதி.ஏச் .தேவகி.ன்( கிளிநொச்சி சி.சி),திருமதி.ரி.வளர் மதி. (கிளி.பரந்தன் குமரபுரம் எச்.எம்.வி), வி.பிரபாகரன்.( கிளி . அக்கராயன் ஜி.ரி. எம்.எஸ்),திருமதி.பி.யசோதா ( கிளி.ராமநாத புரம் வித்)

**மடுவலயத்தில் இருந்து தென் மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

திருமதி.எஸ்.புனிதநிதி ( தேவன் பிட்டி ஜி.ரி.எம்.எஸ்)

திருமதி.ரி.விக்கினேஸ்வரி.(வெள்ளாங்குளம் ஜி.ரி.எம்.எஸ்)

**துணுக்காய் வலயத்தில் இருந்து தென்மராட்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

வி. கதிரேசு(துணுக்காய் வலயக் கல்விவலயம்),செல்வி.விநிமல்தேவி.(ஒட்டுசுட்டான் மகா வித்),திருமதி.பி.ரஜனி ( தேரன் கண்டல் ஜி.ரி.எம்.எஸ்), திருமதி. பி.சிறீஸ்வரி (மல்லாவி மத்திய கல்லூரி), திருமதி. எஸ்.வளர்மதி ( வவுனிக்குளம் ஜி.ரி.எம்.எஸ்)

**வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து தென்மராட்சிக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் வருமாறு,**

வி.பிரேம்குமார் (வவு/பட்டிக்குடியிருப்பு ஜி.ரி.எம்.எஸ்) *(14ஆம் பக்கம் பார்க்க)*

# பூலான்தேவி கொலை வழக்கு இன்று நீதிமன்றில் விசாரணை



(புதுடில்லி)

கொள்ளைக்காரியாக இருந்து பின்னர் மனம் திருந்தி, சமாஜ்வாடிக் கட்சியின் எம்.பி. யாக இருந்த பூலான் தேவி கடந்த 2001 ஆம் ஆண்டு ஜுலை 25 ஆம் திகதி டில்லியில் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பான வழக்கு டில்லி கூடுதல் செஷன்ஸ் நீதிமன் றத்தில் நடந்து வருகிறது. முக்கிய குற்றவாளி ஷேர் சிங்ரானாவை பொலிஸார் கைது செய்தனர்.

வழக்கு விசாரணையில், பொலிஸ் இன்ஸ்பெக்டரும் விசாரணை அதிகாரியுமான சுரேஷ் கவுசிக் நீதிமன்றத்தில் கூறுகையில், "பூலான்தேவி கொள்ளைக்காரியாக இருந்தபோது 1981 ஆம்ஆண்டு பெமாய் என்ற இடத்தில் தாக்கூர் என்ற இனத்தைச்சேர்ந்த 17 பேரை கொலை செய்தார்.இதில் ஷேர்சிங் ரானாவின் உறவினர்களும் அடங்குவர்.அதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாகவே பூலான் தேவியை ஷேர் சிங்ரானா கொலை செய்துள்ளார் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது" என்று கூறினார்.

9 ஆண்டுகளாக நடந்து வரும் விசாரணையில் 170 பேர் சாட்சியம் அளித்துள்ளதாகவும் இது தொடர்பான விசாரணை இன்று நடைபெறும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (6)



திருவள்ளுவர் அடுத்த காக்களூர் ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கோவிலில் ஆடித் திரு விழாவையொட்டி அழுக்கு சாமியாருக்கு 51 கிலோ மிளகாய்த் தூளால் அபிஷேகம் நடந்தது

# சிறுநீரகம் தானம் செய்வது போன்று கைகளையும் தானம் செய்யலாம்

## மருத்துவ கருத்தரங்கில் தகவல்

(தேனி)

சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சை போல கைகள் மாற்று அறுவைச் சிகிச்சை செய்யலாம் என மருத்துவ பயிலரங்கில் தெரிவிக்கப்பட்டது. கம்பம் பள்ளத்தாக்கு இந்திய மருத்துவக் கழகம் சார்பில் தொடர் மருத்துவக் கல்வி பயிலரங்கம் தேனியில் நடந்தது.

இதில் மைக்ரோ அறுவைச் சிகிச்சை குறித்து மதுரை அப்பலோ மருத்துவ மனை கை அறுவைச் சிகிச்சை டாக்டர் டெரன்ஸ் ஜோஸ் பேசியதாவது,

ஒரு தலை முடி அளவுள்ள கண்களுக்குத் தெரியாத நுணுக்கமான இரத்தநாளங்கள், நரம்புகளை பல மடங்கு பெரிதாக்கிக் காட்டும் நுணுக்குக் காட்டி மூலம் மைக்ரோ சத்திர சிகிச்சை செய்யப்படுகிறது. இதன்மூலம் துண்டான கைகள், விரல்கள், கால்கள் மற்றும் கர்ப்பத்தடை அறுவைச் சிக்சை செய்த பெண்களுக்கு மீண்டும் கர்ப்பம் தரிக்க குழாய்களை இணைத்தல், விபத்தில் சிதைந்து போன பாகங்களை சீரமைக்க முடியும்.

அத்துடன் கண்கள், சிறுநீரகம் தானம் போல கைகளையும் தானம் செய்யலாம்.

இறந்த பின் தானம் செய்யப்படும் கைகளை, மாற்று அறுவைச்சிகிச்சை மூலம் இணைக்கவும் மைக்ரோ சத்திரசிகிச்சை பயன்படுகிறது.

இதுபோன்ற சிகிச்சை இந்தியாவில் நடைபெறவில்லை. இதை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன என்றார். (6)

# காஷ்மீரில் ஊரடங்கு நீடிப்பு; பலியானோர் எண்ணிக்கை 15ஆக உயர்வு





(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பள்ளத் தாக்குப் பகுதிகள் முழுவதும் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த வெள்ளிக்கிழமையில் இருந்து கலவரத்தால் பலியானோரின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்துள்ளது.

தெற்கு காஷ்மீரின் பிஜ்பெஹரா பகுதியில் நேற்று முன்தினமிரவு நடந்த கலவரத்தில் தரிக் அகமது என்பவர் பலியானார்.

பாதுகாப்புப் படையினருக்கும் போராட்டக் காரர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் நடந்த மோதலில் 8 பேர் ஒரேநாளில் கொல்லப்பட்டிருப்பது பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதிகளில் 2 வாரங்களுக்கு முன்பு பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 15க்கும் மேற்பட்டவர்கள் இறந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரம் ஸ்ரீ நகரில் இருந்து மற்ற இடங்களுக்கும் பரவியது.

அதன்பின் அனைத்துக் கட்சிக்கூட்டம் உட்பட சமரச முயற்சிகளுக்குப் பின் அமைதி திரும்பியது.

இந்த நிலையில் பிரிவினைவாத கொள்கையுடைய ஹுரியத் அமைப்பினர் ஸ்ரீ நகரில் தடையை மீறி கடந்த வெள்ளிக் கிழமை ஊர்வலம் செல்ல முயன்றபோது பாதுகாப்புப் படையினர் தடியடி நடத்தி கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடித்தனர்.

இதன்தொடர்ச்சியாக, காஷ்மீர் பள்ளத் தாக்குப்பகுதிகளில் கலவரம் வெடித்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தைச் சந்தித்து, காஷ்மீர் நிலவரம் குறித்து அம்மாநில முதல்வர் உமர் அபுதுல்லா விரிவாக ஆலோசனை நடத்த வுள்ளார். (6-2)

# 2500 ஆண்டு பழமையான சிந்துசமவெளி நாகரிக ஓவியக் குறியீடு கண்டுபிடிப்பு

(பழனி)

பழனி அருகே மலைக்குகையில் 2, 500 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிந்து சமவெளி நாகரிக ஓவியக் குறியீடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பழனி- கொழுமம் நெடுஞ்சாலையில் உள்ளது கரடிக்கூட்டம் மலை.இந்த மலையில் தொல்லியல் ஆய்வாளர் நாராயண மூர்த்தி, தொல்லியல் ஆர்வலர் தண்டபாணி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.

தொல்லியல் ஆய்வாளர் நாராயண மூர்த்தி கூறியதாவது,

இந்த ஆய்வில் கரடிக் கூட்ட மலையில் மூன்று குகைகள் இருப்பது கண்டறியப்பட்டது. ஒரு குகையில் தான் 2, 500 ஆண்டுகள் பழமையான ஓவியங்கள் இருப்பது தெரிகிறது. கிழக்கு நோக்கி திரும்பியுள்ள இந்தக் குகை, மனிதன் எளிதாக ஏறிச் செல்ல இயலாத வழுக்கலான பாறை.

இந்தக் குகையின் உள் தாழ்வாரத்தில் இரண்டு ஓவியங்கள் உள்ளன. இவற்றை ஓவியங்கள் என்று கூறுவதை விட ஓவியக் குறியீடுகள் என்று கூறுவதே பொருத்தமாகும். இடதுபுறம் உள்ள ஓவியக் குறியீடு வெள்ளை நிறத்தில் எளிமையான சதுரமாக வரையப்பட்டுள்ளது.

11 செ.மீ. நீளத்திலும், 11 செ.மீ. உயரத்திலும் உள்ளது.இதையடுத்து வலது புறம் உள்ள ஓவியக் குறியீடு 10 செ.மீ. நீளத்திலும், 9 செ.மீ. உயரத்திலும் உள்ளது. இந்தக் குறியீடு உட்புறம் நான்கு சம சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதுவும் வெள்ளை நிறத்தில் வரையப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு குறியீடுகளும் எதற்காக இந்தக் குகையில் வரையப்பட்டன என்பது புதிராக உள்ளது.இந்த இரண்டு ஓவியக் குறியீடுகளும் சிந்து சமவெளி அகழாய்வில் கண்டறியப்பட்ட ஓவியக் குறியீடுகள் போல உள்ளன.

சிந்துவெளி அகழாய்வில் 417 ஓவியக் குறியீடுகள் கண்டறியப்பட்டு வகைப்படுத்தப் பட்டுள்ளன. குகையில் கண்டறியப்பட்ட இடது வெள்ளைச் சதுரம் சிந்துவெளிக் குறியீட்டின் 240 ஆவது வடிவத்துடனும், வலதுபுற நாற் சதுரம் சிந்துவெளிக் குறியீட்டின் 247 ஆவது வடிவத்துடனும் பெருமளவு ஒத்துப் போகின்றன.

சிந்துவெளிக் குறியீடுகளை படிக்க முயன்றவர்கள் இடதுபுறம் உள்ள வடிவத்தை வீடு என்றும், வலதுபுறம் உள்ள வடிவத்தை இடம் என்றும் படித்துள்ளார்கள். வரலாற்று சிறப்பு மிக்க இந்த மலைக்குகையில் கிடைத்துள்ள ஓவியக் குறியீடுகள் சிந்து சமவெளி குறியீடுகளை ஒத்திருப்பது சிந்துவெளி நாகரிகம், தமிழர் நாகரிகமே உறுதியாக்க உதவுகின்றது.

இதே மலையின் ஒருபகுதியில் சங்க காலத்தைச் சேர்ந்த 2ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான 3பல்லாங்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த பல்லாங் குழிகள் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளன.

இதில் ஒரு பல்லாங்குழி முழுமையாக உள்ளது.மற்ற இரண்டு பல்லாங்குழிகளும் தோண்டப்பட்டு பின்பு முற்றுப்பெறாமல் நின்றுவிட்டன என அவர் தெரிவித்துள்ளார். (6)

## பாரதச் செய்திகள்



உத்தரப்பிரதேசம் ஹரித்துவாரில் ஒருவர் தனது பெற்றோரை தோளில் சுமந்து சென்று கங்கை நதியில் புனித நீரை எடுத்துக்கொண்டு வரும் காட்சி

# 'விக்கிலீக்ஸ்' இணையத் தளத்தால் விக்கித் தவிக்கும் அமெரிக்கா

ஆப்கானிஸ்தான் போர் தொடர்பான செய்திக் குறிப்புகள், இரகசியத் தகவல் பரிமாற்றங்கள், புலனாய்வுத் துறையின் தகவல்கள், இராணுவச் செயற்பாடுகள் முதலியவை முதன் முறையாகக் கசிந்துள்ளன. அமெரிக்காவின் பலவீனத்தையும், பாகிஸ்தானின் நரித்தனத்தையும் இது ஒருசேர வெளியுலகுக்குக் கொண்டுவந்திருக்கிறது.

ஆப்கான் போர்க் குறிப்பு விபரங்களை வெளியுலகுக்குக் கொண்டுவர, விக்கிலீக்ஸ் இணையத்தளத்துக்கு அதன் மீடியா பார்ட்னர்களான அமெரிக்காவின் "நியூயோர்க்டைம் ஸம்," பிரிட்டனின் "கார்டியன்", ஜெர்மனியின் "டெர் ஸ்பீஜெல்" ஆகிய பத்திரிகைகள் துணை புரிந்திருக்கின்றன.



அசாஞ்ச்

ஆப்கானிஸ்தானில் தலிபான்களை ஒழிப்பதற்காக அமெரிக்கா தலைமையில் போர் புரிந்து வரும் நேட்டோ படைகளால் கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கான பொதுமக்களின் விபரமும் அதில் இடம்பெற்றுள்ளது. அமெரிக்க இராணுவம் பதிவு செய்திருந்த ஆவணத்திலேயே கொல்லப்பட்ட பொது மக்களின் கணிசமான எண்ணிக்கை விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க உண்மைப் புள்ளிவிபரம் என்னவாக இருக்கும் என எழுந்துள்ள சந்தேகங்கள், அமெரிக்க இராணுவத்தின் போர்க் குற்றச் சர்ச்சையை சர்வதேச அளவில் கிளப்பி இருக்கிறது.

விக்கிலீக்ஸின் "லீக்" வெளியான சில மணி நேரங்களில் கடுங்கோபத்தை வெளிப்படுத்திய அமெரிக்கா, "இது மிகப் பெரிய கிரிமினல் நடவடிக்கை. ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கா மற்றும் கூட்டு நாடுகளின் வீரர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும். அத்துடன், அமெரிக்கா வின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக அமையும்'' என்று அலறி இருக்கிறது.

ஆப்கான் போர்க் குறிப்புகளால் அமெரிக்காவைவிட அதிகப்படியான அம்புகள் தைத்திருப்பது பாகிஸ்தானுக்கு! தலிபான் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்கு உறுதுணை அவசியம் என்ற நிர்ப்பந்தத்தில் பாகிஸ்தானுடன் கூட்டு சேர்ந்தது அமெரிக்கா. ஆனால், தோளில் கையைப் போட்டுக் கொண்டே காலை வாரிவிடும் பாகிஸ்தானின் பொய் முகம் இதில் செயற்பட்டு இருக்கிறது என்பது இப்போதுதான் உரிய ஆதாரங்களுடன் அம்பலமாகி உள்ளது. அமெரிக்காவிடம் இருந்து பல கோடிகளையும், ஆயுதங்களையும் ஒரு கையில் பெற்றுக்கொண்டு, மறு கையால் தலிபான்களை அரவணைத்து அமெரிக்க இராணுவத்தை அழிக்க துணைபுரிந்து இருக்கிறது பாகிஸ்தான்!

"விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்க இராணுவ ஆவணங்களில் துளியும் உண்மை இல்லை. தலிபான்களுக்கு ஆதரவாக செயற்பட்டதே இல்லை. அந்த ஆவணங்களில் இடம்பெற்றுள்ள தகவல்கள் எல்லாம் ஆதாரமற்றவை" என பாகிஸ்தான் சார்பிலும் மறுப்பு அறிக்கை வெளிவந்துள்ளது. அமெரிக்கா, தங்கள் இராணுவ இரகசியங்களை விக்கிலீக்ஸிக்கு அளித்த சோர்ஸ்களைக் கண்டறியும் ஆய்வுப் பணிகளிலும் முழு வீச்சில் ஈடுபட்டு வருகிறது.

"விக்கிலீக்ஸ்" நிறுவனரும், அதன்

## உலகை உலுக்கும் அவலங்களும் 'விக்கிலீக்ஸ்' இடம் உண்டாம்

ஆசிரியருமான ஜீலியன் அசாஞ்ச், அமெரிக்க இராணுவ இரகசியங்கள் யாரிடம் இருந்து வந்தன என்பது எனக்கே தெரியாது. சோர்ஸ்களுக்கு 100 சதவிகிதம் பாதுகாப்பு அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது எங்கள் இணையத்தளம்!" என்கிறார்.

உலகம் முழுவதும் உள்ள "உயர்" இரகசிய ஆவணங்கள் உலாவரும் "விக்கிலீக்ஸ்" வலைத்தளம் 2007 ம் ஆண்டு நிறுவப்பட்டது. கணிதவியல் வல்லுனர்கள், இணையத் தளப் போராளிகள் மற்றும் சீன அதிருப்தியாளர்களால் நிறுவப்பட்ட இந்தத் தளத்துக்குப் பக்கபலமாக இருப்பவர், ஜீலியன் அசாஞ்ச். தன்னை "தகவல் போராளி" என அழைத்துக்கொள்ளும் ஜீலியன் அசாஞ்ச் (வயது 38) அவுஸ்திரேலியாவில் பிறந்தவர். கம்ப்யூட்டரிலும் மற்ற வலைத்தளங்களை ஊடுருவும் 'ஹேக்கிங்'கிலும் கில்லாடி.

இவரை விக்கிலீக்ஸின் நிறுவுனர் என்று அவுஸ்திரேலியப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஆனால், அவர் தன்னை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. அதேநேரத்தில், தன்னை 'எடிட்டர் இன் சீஃப்' என அறிவித்துக்கொண்டு, தளத்தில் வெளியிடப்படும் ஆவணங்களின் நம்பகத்தன்மைக்கு அவர் உறுதியளித்து வருகிறார்.

ஸ்வீடனைத் தலைமை இடமாகக் கொண்டு செயற்படும் விக்கிலீக்ஸுக்கு எனத் தனியாக ஓர் அலுவலகம் இல்லை. விக்கி மீடியாவைப் போலவேயார் வேண்டுமானாலும் தகவல்களையும் ஆவணங்களையும் அப்டேட் செய்யலாம். தற்போது 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட இரகசிய ஆவணங்கள் வெட்ட வெளியில் விக்கிலீக்ஸில் கொட்டிக் கிடக்கின்றன.

விக்கிலீக்ஸின் ஜூலியன் அசாஞ்ச் தனக்கென்று முழு நேர ஊழியர்கள் ஐந்து பேரை வைத்துள்ளார். இவர் களைத் தவிர, உலக அளவில் 1,000 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆதரவாளர்கள் இயங்கி வருகின்றனர். இவர்களிடம் இருந்து தான் புலனாய்வுத் தளத்தின் பாதுகாப்புக்கும் நிர்வாக நட வடிக்கைகளுக்கும் தேவையான நிதியும் கிடைக்கிறது. உலக அளவில் இருக்கின்ற உண்மை விரும்பிகளும் தானாக முன்வந்து இணையத்தளம் மூலமே டொனேஷன் வழங்குகின்றனர்.

சர்வதேச நாடுகளின் இராணுவம், அரச அதிகாரிகள் முதல் அரசியல் பிரமுகர்கள் வரை அனைத்து இடங்களிலும் இவர்களுக்கு சோர்ஸ் இருக்கிறது. ஆனால், யாராலும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு சோர்ஸ்கள் பாதுகாக்கப்படுகின்றன.

2007ஆம் ஆண்டு ஜூலைக்குப் பிறகே, உலக அளவில் விக்கிலீக்ஸ் கவனிக்கப்பட்டது. அப்போது ஈராக் போரில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று, கீழே இருந்த ராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் புகைப் படப் பத்திரிகையாளரைச் சுட்டுக்கொன்றது. அவருக்கு அருகே சென்ற இரு சிறுவர்களும் கொல்லப்பட்டனர்.



பிற்பாடு, 'அவர் கேமராமேன் என்பது தெரியாது' எனக் கூறிய அமெரிக்க இராணுவத்தினர், 'சண்டை நடக்கும் இடத்தில் சிறுவர்களுக்கு என்ன வேலை?' என்று அலட்சியமாக நியாயம் கற்பித்தது. அந்த நிகழ்வை அப்படியே சலனப் படமாக வெளியிட்டது, விக்கிலீக்ஸ். அந்த வீடியோ காட்சிகள் இன்றும் அதிகம் பார்க்கப்பட்ட வீடியோ என்ற சிறப்பை இணையத்தில் தக்க வைத்துள்ளது.

ஈராக் போரில் நிகழ்ந்த மனித உரிமை மீறலைவெளிக்கொணர்ந்த விக்கி லீக்ஸ் ஜூலியன் அசாஞ்ச் மீதான வழக்கில் இருந்து மீள்வதற்கு, சுதந்திர நிருபர்களின் சொர்க்கம் என்றழைக்கப்படும் ஐஸ்லாந்து காப்பாற்றியது.

அதேபோல், ஈராக் போரின்போது சிறையில் நிகழ்ந்த கொடுமைகள், கென்னா அதிபரின் குடும்பத்து முறைகேடு, சாராபாலின் இ-மெயில் ஹேக்கிங் எனப் பரபரப்புகள் தொடர்ந்தன.

ஜூலியன் அசாஞ்ச் மீது இதுவரை 100க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. அவற்றை எல்லாம் ஏ.பி.,லாஸ் ஏஞ்சலீஸ் டைம்ஸ் போன்ற பத்திரிகைகளே கவனித்துக்கொள்கின்றன.

அசாஞ்ச்சின் இலட்சியம் தான் என்ன?

'நியாயம் இது மட்டுமே எங்கள் ஒரே நோக்கம். அமெரிக்க இராணுவத் தீவிரவாதிகள், ஹேக்கர்ஸ், இஸ்லாமியத் தீவிரவாதிகள் உள்ளிட்டோர் எங்களை ஒழிப்பதற்கு எவ்வளவோ முயன்றனர். ஆனால் அவர்களால் நெருங்கக் கூட முடியாத பாதுகாப்பான இரகசியக்கோட்டையாக இருக்கிறது, விக்கிலீக்ஸ்!' என்கிறார். கம்பீரமாக அசாஞ்சுக்கு வீடோ... வாசலோ கிடையாது. ஒரு லேப்டாப் இரண்டு ஜோடி பேண்ட் ஷர்ட், ஒரு பேக்.... இவை மட்டுமே அவரது உடைமை. இரண்டு வாரங்களுக்கு மேல் ஒரு நாட்டில் தங்கமாட்டார்.

ஏற்கனவே அமெரிக்காவால் தேடப்படும் அசாஞ்ச், ஆப்கான் போர்க் குறிப்புகள் வெளியிட்ட பிறகு, தேசத் துரோகி என்கிற ரீதியில் தேடப்படுகிறார். 'தப்பித் தவறிகூட அமெரிக்கா பக்கம் போய் விட வேண்டாம்'என அவரது ஆதரவாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

இந்தச் சூழலில், தற்போது வெளியிடப்பட்ட இரகசிய ஆவணங்களைக் காட்டிலும் உலக அளவில் உலுக்கக் கூடிய வேறு சில ஆவணங்களைக் கூடிய விரைவில் எதிர்பார்க்கலாம் என்றும் விக்கிலீக்ஸ் வட்டாரங்கள் அசர டிக்கின்றன. அனேகமாக இலங்கை போர் குறித்ததாக அவை இருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.

ஜூனியர் விகடன்

# எண்கணிதப்படி ஒவ்வொருவரும் வழிபட வேண்டிய தெய்வங்கள்

1, 10, 19, 28, ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் மகாவிஷ்ணுவையும், சூரிய பகவானையும் வழிபாடு செய்வது நன்மை தரும்.2, 11, 20, 29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் பெண் தெய்வங்களை பூஜிப்பதும், சந்திர பகவனைப் பூஜிப்பதும் நல்ல பலனை உண்டு பண்ணும்.

3, 12, 21, 30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் தட்சிணாமூர்த்தியை, நவக்கிரகத்தில் குரு பகவானையும் வழிபடுவது நல்ல பலனைத் தரும்.

4, 13, 22 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் துர்க்கையை வழிபாடு செய்வதும், ராகு பகவானை வழிபாடு செய்வதும் நல்ல பலனை உண்டு பண்ணும்.

5, 14, 23 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் ஸ்ரீராமபிரானைப் பூஜிப்பதும், நவக்கிரகத்தில் புதன் பகவானை பூஜிப்பதும் நல்ல பலன் தரும்.

6,15,24 இந்த திகதிகளில் பிறந்தவர்கள் ராஜராஜேஸ்வரியைப் பூஜிப்பதும் சுக்ர பகவானைப் பூஜிப்பதும் நல்ல பலன் தரும்.

7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் விநாயகப் பெருமானை வழிபாடு செய்வதும், கேது பகவானை பூஜை செய்வதும் நல்ல பலன்தரும்.

8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்தவர்கள் ஆஞ்சநேயர் அல்லது ஐயப்பனைப் பூஜிப்பதும் நவக்கிரகங்களில் சனி பகவானை பூஜிப்பதும் நல்ல பலனைத் தரும்.

9, 18, 27 இந்தத் திகதிகளில் பிறந்தவர்கள் முருகப்பெருமானைப் பூஜிப்பதும் நவக்கிரகத்தில் அங்காரக பகவானைப் பூஜிப்பதும் நல்ல பலனைத் தரும்.

### சுக ஜீவன வாழ்க்கை அமையும் யோகம்

நாலுக்குடையவன் பாக்கிய ஸ்தான மாகிய ஒன்பதாம் இடத்தில் இருந்து தேவ குரு, அசுரகுரு சுப கிரக வீட்டை அடைய ஒன்பதாம் பாவாதிபதி 1, 4, 5, 9, 10, ஆகிய ஏதாவது ஒரு இடத்தில் இருந்து பலம் பெற அந்த ஜாதகர் கடைசி வைர சுகமாக ஜீவனம் நடத்தி நீண்ட ஆயுளை அடைவார். இந்த ஜாதக அமைப்பு உள்ளவர்கள் வீடு கட்டி வாடகைக்கு விட்டு ஜீவனம் செய்வது, சொந்தத் தொழில் செய்வது, வட்டித்தொழில் செய்வது, வெளிநாடு சென்றபின் சம்பாதித்த பணத்தில் வேறு தொழில் முதலீடு செய்து ஜீவனம் செய்வது போன்ற அமைப்புடன் இருப்பார்கள்.

### தந்தையின் சொத்தை அனுபவிக்கும் யோகம்

பாக்யாதிபதி பலம் பெற்று , சந்திர பகவானுக்கு ஒன்பதாம் வீட்டில் குருவும் இருக்க, சந்திரன் சூரியனுக்கு ஒன்பதாம் இடத்தில் அமையப் பெற்ற ஜாதகர் தந்தை வழி சொத்தால் இலாபம் அடைவார்.

அது பூமியாகவோ, கல்வியாகவோ, பதவியாகவோ அல்லது அரசியல் வாழ்க்கையாகவோ இருக்கலாம்.

### தந்தையை விட புகழ் அடைபவர்

ஒன்பதாம் பாவாதிபதி பத்திலும், பத்திற்கு உடையவன் ஒன்பதிலும் பரிவர்த்தனம் அடைவதும் சிறந்த யோகம். இந்தக் கிரகங்கள் நீச்சமடையாமல் , பலம் குறையாமல் இருந்தால் அந்த ஜாதகர் தன் தந்தையை விட பேரும் புகழும் சம்பாதிப்பர்.

### வள்ளலாகும் யோகம்

பாக்யாதிபதி, சுப வீட்டில் இருந்தாலும், பாக்யாதிபதி சுப கிரகத்துடன் கூடி, கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருந்தாலும் உச்சம் பெற்றாலும் அவர் வள்ளலாகத் திகழ்வார்.

### மகாயோகத்தை அடைபவர்

ஜீவன் ஸ்தானமாக பத்துக்கு உடையவனும்,ஐந்து ,ஒன்பதாம் இட அதிபதிகளும் சேர்ந்து இருந்தால் ,பத்தாம் பாவாதிபதி ராஜயோகத்தைக் கொடுக்கக்கூடிய பலத்தை அடைவார். இவரது தசாபுத்தி காலங்களில் எதிர்பாராத உயர்ந்த பலன்களைக் கொடுப்பார்.

### உலக மக்கள் புகழும் ராஜயோகம்

பூரண பலம் பெற்ற ஜீவனாதிபதி ஒன்பதுக்கு உடையவன் மூன்றாம் இடத்தில் இருந்து பாவ கிரகம் சேர்க்கை பெறாமல் இருந்தாலும், அவர்களால் பார்க்கப்படாமல் இருந்தாலும் அது சிறப்பான யோகமாகும். மேலும் ஒன்பது பத்துக்கு உடையவர் ஆட்சி பெற்றாலும் உலகோர் புகழக்கூடிய ராஜயோகத்தை அடைவார்.

தோஷமில்லாத கேந்திராதிபதிகள் ,3,6,8, 11ஆம் இடத்திற்கு உடையவர் சம்பந்தம் பெறாமல் அவர்கள் பார்வையைப் பெறாமல் , இருக்க திரிகோணாதிபதிகளுடன் ராகு அல்லது கேது சேர்ந்திருந்தால் எதிர்பாராத ராஜயோகத்தை அடைவர்.

**சிவல்புரி சிங்காரம்**

# நாட்டில் 90 வீதமான குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்படுவதில்லை

## நுவரெலியா மாவட்ட நீதவான் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் 90 வீதமான குற்றவாளிகளுக்கு தண்டனை விதிக்கப்படுவதில்லை என நுவரெலிய மாவட்ட நீதவான் சமன் காரியவசம் தெரிவித்துள்ளார்.

சமாதான மன்றத்தினால் நுவரெலியாவில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

சட்டம் தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு போதிய விளக்கமின்மையே இவ்வாறு குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கு பிரதான காரணி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது பொலிஸார் தமது வாதங்களை உயரிய த்ரத்தில் முன்வைக்க வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் பொலிஸாரின் வாதங்கள் சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்றவர்களுக்கு நிகராக இருக்க வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை முக்கிய பிரபுக்களின் பாதுகாப்பு கடமைகளுக்காக பொலிஸார் கடமையில் அமர்த்தப்படுவதனால் சில வேளைகளில் வழக்கு விசாரணைகளின் போது அவர்கள் நீதிமன்றங்களில் பிரச்சன்னமாவதில்லை எனவும் நீதியை வழங்க வேண்டியது. நீதிமன்றங்களின் கடமை என்ற போதிலும் 100 வீதம் நீதியையும் நியாயத்தையும் நீதிமன்றங்களில் எதிர்பார்க்க முடியாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நபர்களின் தனிப்பட்ட குணவியல்புகள் சில நேரங்களில் தீர்ப்பினை பாதிக்கும் எனவும் விசாரணைகளின் போது சிலர் அழுவதாகவும் சிலர் மயங்கி விழுவதாகவும் பிணக்குகள் ஏற்படும் போது அவற்றை சமாதான முறையில் தீர்த்துக்கொள்ள மக்கள் பழகிக்கொள்ள வேண்டுமெனவும் நீதவான் வலியுறுத்தியுள்ளார். (6)

# புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 350 சிரேஷ்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் குறித்த உறுப்பினர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் காலத்தில் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்ததாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் இவர்களில் 650 பேர் வவுனியா தடுப்பு முகாமிலும் 700 பேர் காலி பூசா தடுப்பு முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தியமை, அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்தமை, சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளை படுகொலை செய்தமை, தாக்குதல்களுக்காக தகவல்களை திரட்டியவர்கள், வெடிபொருட்களை போக்குவரத்து செய்தவர்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலும் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (6)

# கல்கிஸைக் கடற்படையினரால் ரி–56 ரக துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியான கல்கிஸைப் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றில் மிகவும் பாதுகாப்பான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி–56 ரக துப்பாகி ஒன்று கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படையினர் இக் கால்வாயை துப்புரவாக்கும் பணியில் கடந்த 30 ஆம் திகதி ஈடுபட்டிருந்த போதே இந்த ரி–56 ரக துப்பாக்கியை வெற்றுத் தோட்டாவுடன் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த துப்பாக்கி நீரில் பழுதடையாமல் இருக்கும் வகையில் கிறீஸ்பூசப்பட்டு பொலித்தீனால் மிகவும் பாதுகாப்பான முறையில் மூடப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# 2011 ஆம் ஆண்டிற்குள் முறிகண்டி சிங்கள நகராக காட்சிதரும்

## சண்டேலீடரில் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு திருமுறிகண்டிப் பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் தமிழர் நிலம் பறிக்கப்பட்டு அங்கு 12 ஆயிரம் இராணுவ குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படுகின்றன என்று சண்டே லீடர் மஹிந்தவின் சிங்கள குடியேற்றம் எனும் தலைப்பில் இக் குடியேற்றம் பற்றி தகவல் வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கில் தமிழரது சனத்தொகை ஆதிக்கத்தை குறைத்தல், தமிழர் தமது தாயகம் எனும் கோட்பாட்டை சிதைத்தல், எப்போதுமே தமிழர்களை ஓர் அச்சுறுத்தலிற்குள் வைத்திருத்தல் போன்ற நீண்டகால திட்டத்தினை அடிப்படையாக வைத்து இந்த திட்டம் மஹிந்தவினால் நன்கு திட்டமிட்டு நடைபெறுகின்றது.

12 ஆயிரம் இராணுவ குடும்பங்களும் அங்கு நிரந்தரமாக இருந்து பணியாற்றுவார்கள் அத்துடன் அவர்களுக்கான சிங்கள பாடசாலைகள். வைக்கியசாலைகள் . பௌக்க கோயில் மற்றும் பல பொது சேவைகள் உட்பட வர்த்தக நிலையமும் அமைக்கப்படவுள்ளதாக அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முற்று முழுதாக அங்கு மூன்று கிராமங்களில் உள்ள தமிழர்களை விரட்டியடித்து விட்டு இந்த சிங்கள குடியேற்றம் மஹிந்தவினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தெற்கில் தமிழர்கள் வாழ்கின்றார்கள் அதனால் வடக்கில் சிங்களவர் வாழ்ந்தால் என்ன என்ற ஜனாதிபதியின் கேள்வியினை ஏற்க முடியாது. காரணம் தெற்கில் தமிழர்கள் தாமாகவே குடியேறியுள்ளனர்.

மஹிந்த செய்வதனைப் போன்று அரச ஆதரவுடன் இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்கள் ஊடாக அவர்கள் குடியேறவில்லை என்றும் வாதாடியுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் 2011 ஆம் ஆண்டிற்குள் முறிகண்டி நகர் 75 ஆயிரம் சிங்களவர்களைக் கொண்ட ஓர் சிங்கள நகரமாக காட்சிதரப் போவது உண்மை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# அரசாங்கம் மேற்கொண்ட யுத்தம் குற்றச் செயலாக கருதப்பட முடியாது

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொண்ட யுத்தம் குற்றச் செயலாக கருதப்பட முடியாதென ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி கய்பெட்டன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நன்மையை கருத்திற் கொண்டே பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்த காலத்தில் போராட்டத்திற்கு தயாராவதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தை குற்றச் செயலாக கருதப்பட முடியாது என பெட்டன் சுட்டிகாட்டியுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (6)

# இலங்கையில் தோன்றிய தமிழ் அகராதிகள் 3

செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்



தமிழகத்தில் வாழ்ந்து முடிந்த நா.கதிரைவேற்பிள்ளையவர்கள் "பெயரகராதி" என்ற பெயருடன் ஓர் அகராதியைத் தொகுத்து வெளியிட்டார்.

இந்த அகராதியின் பல பதிப்புக்கள் வெளியாயின. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்கள் இதனை நன்கு பாராட்டியுள்ளார்.

திரு. ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை யாழ்ப்பாணத்திலே பிறந்து வளர்ந்தவர். நாகப்பட்டினத்திலும் காரைக்காலிலும் தொழில் புரிந்தவர். பின்னர் இலங்கை திரும்பி, நாவலர் பெருமானின் பணிகளைத் தொடர்வதிலேயே தமது வாழ்நாளைக் கழித்தார். பல சிறந்த ஆராய்ச்சி நூல்களை ஆக்கியளித்த திரு.முத்துத்தம்பிப்பிள்ளை 1905ஆம் ஆண்டில் ஓர் அகராதியைத் தொகுத்து வெளியிட்டார்.

ஆங்கிலப்பதங்களுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் விளக்கம் கொடுத்துள்ளமை இதன் சிறப்பு.

தும்பளை சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமிழ்ச் சொற்பொருள் விளக்கம் என்னும் தமிழ் - தமிழ் அகராதியொன்றை வெளியிட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்து கந்தரோடையைச் சேர்ந்த ந.சி கந்தையா அவர்கள் நீண்ட காலம் மலேயாவின் புகையிரத திணைக்களத்தில் பணியாற்றியவர். ஆராய்ச்சி வேட்கை மிகுந்த இவ்வறிஞர் "செந்தமிழ் அகராதி" என்றவொரு அகராதியைத் தொகுத்தார்.

1950ஆம் ஆண்டு சென்னையிலிருந்த ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம் இதனை அச்சிட்டு வெளியிட்டது. 1999ல் உலகத் தமிழாராய்சசி நிறுவனம் இதனை மறு பிரசுரஞ் செய்துள்ளது.

**கலைச்சொல்) அகராதிகள்**

இன்றைய உலகில் கலைச்சொல் அகராதிகள் பெருகிவருகின்றன. ஒவ்வொரு இயலுக்கும் கைதேர்ந்தவர்களினால் அகராதிகள் தொகுத்து வெளியிடப்படுகின்றன. வைத்திய அகராதி, உளவியல் அகராதி, பொருளியல் அகராதியைத் தொகுத்தவர் டாக்டர் சாமுவேல் பிஸ்க் கிறீன் என்னும் அமெரிக்க தொண்டராவர். இவர் யாழ்ப்பாணத்திலே தமிழ் மாணவர்களுக்குத் தமிழிலேயே மேலைத்தேய மருத்துவத்தைக் கற்பித்தவர். இதற்காக ஆங்கிலத்திலிருந்து சிறந்த வைத்திய நூல்களைத் தமிழுக்கு மொழி பெயர்த்தார். தமிழ் மாணவர்களுக்குத் துணைபுரிய (1) *உடலியல் சொற்கோர்வை* என்ற நூலை வெளியிட்டார். இது 134 பக்கங்களைக் கொண்டது, அத்துடன் (2) *மருந்துச் சரக்குகள், பெண்கள், குழந்தைகள் நோய்கள் மற்றும் வைத்திய நீதிநெறிகள் (Vocabulary of Materia Medica, Diseases of women and Children and Medical Jurisprudence)* என்ற நூலையும் வெளியிட்டார். இது 1875 ஆண்டு நாகர் கோவில் லண்டன் மிசன் அச்சியந்திர சாலையில் விற்கப்பட்டது இந்நூல் 161 பக்கங்களைக் கொண்டது.

சுதேச தமிழ்ப்பண்டிதர்கள் தமிழ் இலக்கியம் சம்பந்தமான கலைச்சொல் அகராதிகளை தொகுப்பதில் சிறந்து விளங்கினர். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை 1902ல் அபிதான கோசமெனும் இலக்கிய விளக்க அகராதியை தொகுத்து வழங்கினார். அ.குமாரசுவாமிப் புலவர் ஆனந்த வருடம் (1915) தமிழ் இலக்கியச் சொல் அகராதியை வெளியிட்டார். இது சென்னை வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிடப்பட்டது மற்றும் வைத்தியச் சொற்களை தமிழப்பதங்களுடன் வெளியிட்டார். இந்த வகையில் இரண்டு நூல்கள் முக்கியமானவை.


சொற்பிறப்பு அகராதிப் பணியில் ஈடுபட்டு உழைத்து உலகப்புகழ் பெற்றவர் கத்தோலிக்க அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாச அடிகளாவர். இவர் எழுதிய சொற்பிறப்பு - ஒப்பியல் அகராதி (An Etymological and Comparative Lexiocon of the Tamil Language) 1938ஆம் ஆண்டுக்கும் 1948ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பகுதி பகுதியாக வெளியிடப்பட்டது. இவ்வகராதி முற்றுப்பெற முன்னரேயே ஞானப்பிரகாச அடிகளார் இவ்வுலக வாழ்வினை நீத்தார். இவரது பணியைத் தொடர்ந்து முடிக்க தும்பளையைச் சேர்ந்த எச்.எஸ் தாவீது அடிகளார் முயன்றிருக்கின்றார்.

இலங்கைத் தமிழறிஞர்கள் அகராதித் தொகுப்பில் அதிக ஈடுபட்டு மிகுந்த ஊக்கத்துடன் உழைத்திருக்கின்றனர். இதற்கு மேனாட்டு மதத் தொண்டர்கள் கிறிஸ்தவத்தை சுதேச நிலைப்படுத்துவதிற் கொண்டிருந்த, ஆவல் யாழ்ப்பாண மக்களிடையே காணப்பட்ட ஆழ்ந்த தமிழ்ப்புலமை மேனாட்டு மதத் தொண்டர்கள் வழங்கிய உயர்தர ஆங்கிலக் கல்வி அச்சக வசதி யாழ்ப்பாணம் தமிழகத்திற்கு அருகாமையில் இருந்தமை அங்கிருந்து தமிழறிஞர்களுடன் ஒட்டி உறவாடினதும் முக்கிய காரணங்களாகத் தெரிகின்றன.

(முற்றும்)







நெல்லியடி பொலிஸாரினால் பிரதேச மக்களுக்கான சிவில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் குழுவை அமைப்பதற்கான கூட்டம் அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு தலைமைதாங்கிய நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.காங்கரா, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: - கரவெட்டி செய்தியாளர்)

# இறுதிக் கட்ட யுத்தத்தின் போது 1400 பொதுமக்களே கொல்லப்பட்டிருக்கலாம்

## பேராசிரியர் றொஹான் குணரட்ண கூறுகிறார்

(கொழும்பு)

சர்வதேச சமூகத்துடன் சுமுகமான உறவுகளைப் பேணுவதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் வலையமைப்பை தகர்க்க முடியும் என சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் இன வன்முறை தொடர்பான பேராசிரியர் றொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் கரிசனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்துவதன்மூலம், புலிகளை பலவீனப்படுத்த முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்படுகின்றது என்பதனை புலம்பெயர் தமிழர்கள் உணரும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு வலுவாகக் காணப்படுவதாகவும் சட்டவிரோதமான ஆட்கடத்தல் நடவடிக்கைகளை புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் அரசாங்கத்திற்கு எதிராக பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்ட அவர் துரித கதியில் செயற்பட்டு புலிகளின் சர்வதேச வலையமைப்பை தகர்க்காவிட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படாத வகையில் எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க முடியாதெனவும் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பெருமளவு பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக புலிகள் பிரசாரம் செய்துள்ளதாவும், இதற்கு எதிராக அரசாங்கத் தரப்பினர் வலுவான பிரசாரங்களை முன்னெடுக்கத் தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கு இடையில் பிளவு காணப்படுவதாக தெரிவித்த அவர் உருத்திரகுமாரன், நெடியவன் மற்றும் இமானுவல் ஆகியோருக்கு இடையில் முறுகல்நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனிடம் பெருந் தொகையான செல்வம் இருப்பதாக வெளியாகும் பிரசாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாதென அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகளுக்கு எதிராக செயற்படுவதன் மூலம் இலங்கை குறித்த சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பில் பாதிப்பு ஏற்படலாம் எனவும் எனவே, சர்வதேச சமூகத்துடன் சுமுகமான உறவுகளைப் பேணுவது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது மிகவும்அவசியமானதென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் படையினர் பொதுமக்களை வேண்டுமென்று தாக்கவில்லை எனவும், போராட்டத்தின் போது பொது மக்கள் இழப்புக்களை தவிர்க்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஆயிரத்து நானூறு பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்பதே தமது மதிப்பீடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6-2)

# முன்பள்ளி விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

தோப்பு அருள்நந்தி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.ராஜவரோதயம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விமலநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். இராஜலிங்கம், அச்சுவேலி பிரதேசசபை பிரதேச உத்தியோகத்தர் வி.கனகராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

கௌரவ விருந்தினர்களாக அச்சுவேலி மேற்கு கிராம அலுவலர் வி.கோபாலதாஸ், அச்சுவேலி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.கருணேஸ்வரன், விவசாய சம்மேளனத்தலைவர் இ.விக்னேஸ்வரன், சனசமுக நிலையத் தலைவர் பி.செந்தில்தாசன், கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் ரி.பிரேமதீபன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்து வைக்கவுள்ளனர்.

அத்துடன் சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (6-2)

# முல்லைத்தீவில் கல்வி நடவடிக்கைகள் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை

## வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்ச் சூழல் காரணமாக பாதிக்கப்பட்டு தற்போது மீள் குடியேற்றப் பணிகள் இடம் பெற்றுவரும் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் கல்வி நடவடிக்கைகள் இன்னும் பூரணமாக வழமைக்குத் திரும்பவில்லை என தெரிவிக் கப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் போர்க் காலத்தில் இயங்கி வந்த 54 பாடசாலைக ளில் தற்போது 16 பாடசாலைகளே மீள் குடி யேற்றப் பிரதேசங்களில் இயங்குவதாக வல யக் கல்விப் பணிப்பாளர் எம்.தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மீள இயங்கத் தொடங்கி யுள்ள பாடசாலைகள் எவ்வித வளங்களோ அடிப்படை வசதிகளோ இன்றி இருப்பதால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரு வதாக ஆசிரியர்களும் மாணவர்களும் தெரி விக்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மகா வித்தியால யத்தின் கட்டடங்கள் முழுமையாக அழிந் துள்ள நிலையில் தற்காலிக கொட்டில்களிலும், மர நிழல்களின் கீழும் மாணவர்கள் தமது கல்வியை ஆரம்பித்துள்ளனர்.

ஏற்கனவே சுனாமி பேரலையினால் 89 மாணவர்களை இழந்து முற்றாக அழி வடைந்த இந்தப் பாடசாலை மீள் கட்டுமானப் பணிகளின் மூலம் மீண்டும் சீரமைக்கப்பட்டு இயங்கி வந்தது.

பின்னர் கடந்த ஆண்டு இடம் பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது மீண்டும் முற்றாக அழிவுக்குள்ளான முல்லைத்தீவு மகாவித்தியாலயம் தற்போது போருக்குப் பின்னர் மீள் குடியேற்றப் பணிகள் இடம் பெற் றுப் பல மாதங்கள் கடந்த பின்னரும் சீர மைக்கப்படாத நிலையிலேயே காட்சியளிக் கின்றது.

தற்போது இரண்டாவது தடவையாக இந் தப் பாடசாலையைக் கட்டியெழுப்பும் முயற்சி யில் பாடசாலை அதிபர் செபமாலை அல்பிரட் ஈடுபட்டு வருகிறார்.

இவ்வாறே முல்லைத்தீவு வலயத்தைச் சேர்ந்த கள்ளப்பாடு பாடசாலை மற்றும் முல் லைத்தீவு றோமன் கத்தோலிக்கப் பாட சாலை ஆகியனவும் முழுமையாக அழிவுக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவற்றைக் கட்டி யெழுப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.தேவேந்திரன் தெரிவித்துள் ளார்.

மேலும் இப்பாடசாலைகளுக்கு தேவை யான தளபாடங்களை Unicef நிறுவனம் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(6)

# கிழக்கில் கடல் நீர்மட்டம் உயர்வதால் கரையோரப் பகுதிகள் நீரில் மூழ்கும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையின் கிழக்குக் கரையோர வலயத்தில் கடல் நீர் மட்டம் உயரும் நிலை அதிகரித்துள்ளதாக நாரா நிறுவனம் தெரி வித்துள்ளது.

உலக வெப்பநிலை அதிகரிப்புக்குக் கார ணமாக இமாலய மலைப் பிரதேசத்தின் பனிப்பாறைகள் உருகுவதே இதற்குப் பிர தான காரணம் என நாரா நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி பேராசிரியர் கே.அரு ளானந்தன் குறிப்பிட்டார்.

நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய் வின் மூலம் இந்தத் தகவல் தெரிய வந் துள்ளது.

கிழக்குக் கடல் மட்டம் 1.2 மில்லி மீற்றரால் வருடாந்தம் அதிகரித்துச் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது கடந்த நான்கு வருடங்களில் கடல்நீர் மட்டம் ஐந்து மில்லி மீற்றர் அளவில் உயர்ந்துள்ளதாகவும் அத்தோடு கடல் நீர் மட்டம் அதிகரிப்பதன் காரணமாக இரண்டு வகையில் பாதிப்புக்கள் ஏற்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

கடல்நீர் மட்டம் உயர்வதால் கரையோரப் பகுதிகள் நீரில் மூழ்கும் நிலை ஏற்படும் என வும் ஆறுகளில் உப்பு நீர் புகுவதற்கான வாய்ப் புகள் உள்ளதாகவும் தெரிவித்தார்.

(6-2)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதற்கட்டப்பணிகள் பூர்த்தி

(கொழும்பு)

அம்பாந்தோட்டைதுறைமுகத்தின் முதற் கட்டப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி அம்பாந் தோட்டை துறைமுகத்தில் முதல் கட்டத்தை ஜனாதிபதி திறந்து வைப்பார் என எதிர்பார்க் கப்படுகிறது.

நவம்பர் மாதமளவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் முதலாவது கப்பல் தரித்து நிற்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள் ளது.

அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணிகள் நான்கு கட்டங்களாக நடைபெற்று வருகின்றதுடன் கப்பல்கள் தரித்து நிற்கக் கூடிய வகையில் கரையோரப் பகுதி ஆழப் படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துறைமுக நிர்மாணப் பணிகளுக்காக 450 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள் ளதாகவும் அவர்களுக்கு தேவையான நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் படுகிறது.

(6)

# வாகனங்களின் வேகத்தைக் கண்டறிவதில் ஸ்பீட் கண் பயன்படுத்தும் முறை தோல்வி

(கொழும்பு)

அதிவேகமாக வாகனம் செலுத்துப வர்களைக் கண்டறிவதற்கு ஹை ஸ்பீட் கண் எனும் கருவியை பயன்படுத்தும் முறை தோல்வியடைந்துள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிமல் லூவ்கே கூறியுள் ளார்.

வடமேல் மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நிமல் லூவ்கே நேற்று முன்தினம் குருநாகலில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்துத் தெரி விக்கையில், பொலிஸ் மறைந்திருந்து ஸ்பீட் கண் மூலம் வாகனங்களின் வேகத்தைக் கண்டறியும் திட்டம் தோல்வியடைந்துள்ளது எனவும் எதிர்காலத்தில் பொலிஸார் அவற் றைப் பயன்படுத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் வேகத்தைப் பரீட்சிப் பதற்கு பொலிஸார் வீதியிலே இருக்க வேண் டும். அவர்களைக் காணும் சாரதிகள் அச்சம் காரணமாக வேகத்தைக் குறைப்பதுடன் ஏனைய சாரதிகளையும் வேகத்தைக் கட்டுப் படுத்துமாறு எச்சரிப்பர் என அவர் கூறி னார்.

இவ்வருடத்தில் வடமேல் மாகாணத்தில் மாத்திரம் வாகன விபத்துக்கள் காரணமாக 167 பேர் பலியானதாகவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

(6)

## 03.08.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 435 - கொன்ஸ்டண்டீனபோலின் ஆயர் நெஸ்டோரியஸ் (நெஸ் டோரியனிசத்தை ஆரம்பித்தவர்) பைசண்டைன் பேரரசன் இரண்டாம் தியோடோசியசினால் எகிப்துக்கு நாடுகடத்தப் பட்டார்.
- 1492 - கொலம்பஸ் ஸ்பெயினை விட்டுப் புறப்பட்டார்.
- 1492- ஸ்பெயினில் இருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளி யேற்றப்பட்டனர்.
- 1645 - முப்பதாண்டுப் போர்: ஜெர்மனியில் ஆலர்ஹைம் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் புனித ரோமப் பேரரசுப் படைகளைத் தாக்கி வெற்றி பெற்றனர்.
- 1678 - அமெரிக்காவின் முதலாவது கப்பல், லெ கிரிஃபோன் றொபேர்ட் லசால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1783 - ஜப்பானில் அசாமா மலை வெடித்ததில் 35,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1860 - நியூசிலாந்தில் இரண்டாவது மாவோரி போர் ஆரம்பமானது.
- 1914- முதலாம் உலகப் போர்: ஜெர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.
- 1916 - ஐரிய தேசியவாதி சேர் றொஜர் கேஸ்மெண்ட் ஈஸ்டர் எழுச்சியில் அவரின் பங்களிப்புகளுக்காக லண்டனில் தூக்கிலிடப்பட்டார்.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனியின் பெரும் தலைவரானர்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி பிரித்தானிய சோமாலிலாந்து மீது போர் தொடுத்தது.
- 1949 - தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.
- 1960 - நைஜர் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1975 -மொரோக்கோவில் விமானம் ஒன்று மலை ஒன்றுடன் மோதியதில் 188 பேர் கொல்லப்பட்டனர்.
- 1976 - காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1990 - காத்தான்குடித் தாக்குதல் 1990: கிழக்கிலங்கையில் காத்தான்குடி யில் முஸ்லீம் பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு நிகழ்வில் பெண்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப் பட்டனர்.
- 2005 - மவுரித்தேனியாவில் இடம் பெற்ற இராணுவப் புரட்சியில் அதிபர் மாவோயா ஊல்ட் தாயா பதவியில் இருந்து அகற்றப் பட்டார்.
- 2006 - திருகோணமலை தோப்பூர் அல் நூராப் பாடசாலையில் தங்கியிருந்த அப்பாவிப் பொதுமக்கள் 12 பேர் எறிகணை வீச்சில் கொல் லப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1924 - லியோன் யூரிஸ், அமெரிக்க நாவலாசிரியர் (இ. 2003)
- 1957 - மணி சங்கர் இந்திய திரைப்பட இயக்குனர்.

## இறப்புகள்

- 1977 - மக்காரியோஸ், சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதி (பி.1913)
- 1993 - சுவாமி சின்மயானந்தா, வேதாந் தத்துவத்தைப் பரப்பிய இந்திய ஆன்மிகவாதி (பி.1916)
- 2008 - அலெசாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (பி. 1918)

**1858 -இலங்கையில் புகையிரத சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.**



# பாகிஸ்தானில் தொடர்ந்தும் பலத்த மழை; பலியானோர் எண்ணிக்கை மேலும் உயர்வு

(பெஷாவர்)

பாகிஸ்தானில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக வெள்ளத்துக்கு பலியானோரின் எண்ணிக்கை ஆயிரத்து 500 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 80 ஆண்டுகளில்இல்லாத அளவுக்கு பாகிஸ்தானில் இந்த ஆண்டுப் பருவ மழை பெய்து வருகிறது. இதனால் பாகிஸ்தானிலுள்ள பெரும்பாலான கிராமங்களில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. குறிப்பாக வடமேற்கு கைபர்-பக்துன்வா மாகாணத்தில் பலத்த மழை பெய்து வருகிறது.

கடந்த 5 நாட்களாக பெய்த மழைக்கு இதுவரை ஆயிரத்து 500 பேர் பலியாகியுள்ளதுடன் 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர். இதன் நிவாரணப் பணிகளை மாவட்ட நிர்வாகங்கள் முடுக்கி விட்டுள்ளனர்.

மேலும் வெள்ளத்தில் சிக்கியோரை மீட்க 30 துணை இராணுவப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர்களை ஹெலிகொப்டரில் சென்று மீட்டு வருகின்றனர். (6)



ஆப்கானிஸ்தானில் தலிபான் வேட்டையில் ஈடுபட்டுள்ள அமெரிக்க கூட்டு இராணுவப் படையினர் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து , காபூலில் , ஏராளமான பெண்கள் கோஷம் எழுப்பியவாறு அதிபர் மாளிகை நோக்கி பேரணி நடத்தினர்.

# ரஷ்யாவில் கடும் வெயில் நீடிப்பு; மழை வேண்டி மக்கள் பிரார்த்தனை

ரஷ்யாவில் 130 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடும் வெயில் நீடித்து வருகிறது. இதனால் அங்குள்ள காடுகள் தீப்பிடித்து எரிகின்றன. கடந்த 2 நாட்களில் மட்டும் 774 தீ விபத்து சம்பவங்கள் நடந்து உள்ளன. இதில் 28 பேர் பலியாகியுள்ளனர்.

மத்திய மற்றும் வோல்கா மாவட்டங்களில் வெயில்அளவுமேலும்உயரும்என்றுவானிலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர். எனவே அங்குள்ள மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு நகருமாறு வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது. கடுமையான வெயில், வறட்சி , தீ விபத்துக்களால் 2 இலட்சத்து 40 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோதுமை ஏற்றுமதியில் சிறப்பான இடத்தில் இருக்கும் ரஷ்யாவில் தற்போது கோதுமை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அனைத்து மக்களும் ஒன்று கூடி மழைக்காகவும் வெயில் குறைய வேண்டும் என்றும் கோரி பிரார்த்தனை நடத்துமாறு ரஷ்ய ஆர்த்தடக்ஸ் பிஷப் கிரில் கேட்டுக் கொண்டுள்ளார். (6)

# மண்ணில் புதைந்துள்ள கப்பலை அகழ்ந்தெடுக்கும் பணி தீவிரம்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உலக வர்த்தக மையமிருந்த இடத்தில் பண்டைய கப்பல் ஒன்று புதைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதை அகழ்ந்தெடுக்கும் பணியில் தொல்பொருள் துறை வல்லுநர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். நியூயோர்க் நகரிலிருந்த உலக வர்த்தக மையத்தின் இரட்டை கோபுர கட்டடங்கள் மீது கடந்த 2001 ஆம் ஆண்டு அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானங்களை மோதி தாக்குதல் நடத்தினர்.

இதில் இரட்டைக் கோபுர கட்டடங்கள் இடிந்து தரை மட்டமானது. அந்த இடத்திலிருந்த கொன்கிரீட் குவியல்கள் இராட்சத இயந்திரங்கள் உதவியுடன் அகற்றப்பட்டன.

அப்போது உலக வர்த்தக மைய கட்டடங்கள் இருந்த இடத்தின் தரைப் பகுதிக்கு கீழே பண்டைய கப்பல் ஒன்றின் பாகங்கள் இருப்பது தென்பட்டது. இதையடுத்து அந்த கப்பலை அகழ்ந்தெடுக்கும் பணி ஆரம்பமாகியது. அமெரிக்காவை சேர்ந்த தொல்பொருள் ஆய்வுதுறை வல்லுநர்கள் மெக்டொனால்டு மற்றும் மைக்கேல் பாப்பலர் அந்த கப்பலை வெளிக்கொணரும் பணியில் ஈடுபட்டுள்ளனர். 18 ஆம் நூற்றாண்டில், மன்ஹாட்டன் நகரை விரிவுபடுத்துவதற்காக, ஹட்சன் நதியின் சிறு பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு நிலமாக்கப்பட்டது. அந்த கழிவுகளில் இந்த கப்பலும் ஒன்று. இது குறித்து மெக்டொனால்டு கூறியதாவது,

கப்பலின் பக்கவாட்டில் கட்டப்பட்டிருக்கும் மரக்கட்டைகளின் உடைந்த பாகங்களை சமீபத்தில் கைப்பற்றினோம். அந்த மரக்கட்டைகளை வைத்து அதன் வயதை கண்டுபிடிக்கவுள்ளோம்.

இதை வைத்து கப்பல் எந்த ஆண்டில் கட்டப்பட்டதென்பதை கண்டுபிடித்து விடலாம். தவிர கப்பலின் புதை படிவத்தை படகு வல்லுநர்களின் துணையுடன் கவனமாக ஆய்வு செய்து வருகிறோம். கப்பல் குறித்து கிடைக்கும் தகவல்களை பதிவு செய்து வருகிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார். (6)

# ஈரானைத் தாக்க தயாராகும் அமெரிக்கா

## அந்நாட்டு இராணுவ அதிகாரி தெரிவிப்பு

அணுகுண்டு தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபட்டுள்ளது. இதற்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இந்த முயற்சியை ஈரான் கைவிடவில்லை. எனவே ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா அனைத்து நிலையிலும் தயாராக இருப்பதாக அமெரிக்க இராணுவ தலைமை அதிகாரி மைக்முல்லன் கூறியுள்ளார்.

இது பற்றி அவர் கூறியதாவது,

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த பிராந்தியத்தில் ஈரானால் ஏற்படும் ஆபத்தை தடுக்க வேண்டிய கடமை அமெரிக்காவுக்கு உள்ளது.

எனவே இதற்காக அனைத்து திட்டங்களையும் வகுத்துள்ளோம். தேவைப்பட்டால் ஈரான் மீது தாக்குதல் நடத்தவும் அமெரிக்கா தயங்காது. இதற்கு அமெரிக்க இராணுவம் தயார் நிலையில் உள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க கூடாது என்பதற்காக சர்வதேச அளவில் இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொருளாதார தடை உள்ளிட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்தார். (6-2)

# அமெ.மக்களிடையே சரிந்துவரும் பராக் ஒபாமாவின் செல்வாக்கு

அமெரிக்க மக்களில் பெரும்பாலானோர் தற்போதைய அதிபர் ஒபாமாவைவிட , முன்னாள் அதிபர் பில்கிளின்டனைத்தான் விரும்புகின்றனர். அமெரிக்காவின் முன்னணி ஆய்வு நிறுவனம் ஒன்று, அமெரிக்க முன்னாள் அதிபர்கள் மற்றும் தற்போதைய அதிபரில் , யாருக்கு செல்வாக்கு அதிகம் உள்ளதென்பது குறித்த ஆய்வை சமீபத்தில் நடத்தியது.

இதில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, முன்னாள் அதிபர் பில்கிளின்டனுக்குத்தான் , தற்போது அமெரிக்க மக்களிடையே செல்வாக்கு அதிகம் உள்ளது. 61 சதவீதம் பேர் , கிளின்டனுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்த வரிசையில் , அமெரிக்க மக்களின் ஏகோபித்த வரவேற்புக்கு இடையே கடந்தாண்டு அதிபராகப் பொறுப்பேற்ற ஒபாமாவுக்கு இரண்டாமிடம் கிடைத்துள்ளதாகவும் அவருக்கு ஆதரவாக 52 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் , ஒபாமாவின் செல்வாக்கு முதல் முறையாக அமெரிக்க மக்களிடையே வீழ்ச்சியடைந்துள்ளது.

அதே நேரத்தில், கடந்த 2008 இல் இருந்து நடத்தப்பட்ட ஆய்வுகளில் , கிளின்டனுக்கு , தற்போது மீண்டும் செல்வாக்குப் பெருகியுள்ளது. இந்த ஆய்வில் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் 3 ஆம் இடம் பிடித்துள்ளார். இவருக்கு , ஆதரவாக 45 சதவீதம் பேர் கருத்துத் தெரிவித்துள்ளதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# நவீனமயமாகிறது சீன இராணுவம்

சீன இராணுவம் நவீன மயமாக்கப்பட்டு வருவதாக அந்நாட்டின் பாதுகாப்புத்துறை அமைச்சர் லியான் குவாங்லீ தெரிவித்தார்.

உலகின் மிகப் பெரிய இராணுவமான சீன இராணுவத்தின் 83 ஆவது ஆண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.




இராணுவத்தை நவீனப்படுத்துவதோடு சைபர் போர் மற்றும் பிராந்திய அளவிலான சண்டைகளை திறம்பட எதிர்கொள்வது எனவும் விழாவில் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

சீனாவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் லியான் குவாங்லீ விழாவில் பங்கேற்று பேசியதாவது,

சீன இராணுவம் விரைவாக வளர்ச்சியடைந்துள்ளது. உலகிலேயே அமெரிக்காவுக்கு அடுத்த படியாக சீனாவில் தான் இராணுவத்துக்கு அதிகமாக செலவிடப்படுகிறது. நாட்டின் வளர்ச்சிக்கும் பொதுமக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதற்கு இராணுவம் தயாராக உள்ளது.

நாட்டின் பாதுகாப்பை முக்கியமாகக் கருதி இராணுவம் மேம்படுத்தப்பட்டு வருகிறது. தாய்வான் திபெத் ஆகியவை சீனாவுடன் இணைந்த பகுதிகள் என்பதால் இதில் சீனா அதிக ஆர்வம் காட்டி வருகிறது. பாகிஸ்தான் மற்றும் வட கொரியாவுடன் முக்கிய விடயங்களை சீன இராணுவம் பகிர்ந்து வருகிறது. இராணுவம் நவீனப்படுத்தப்பட்டு வருவதோடு அவர்களுக்கான ஏராளமான கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. பிராந்திய அளவிலான சண்டைகளை எதிர்கொள்ளும் வகையில் அவர்களின் பலம் மேம்படுத்தப்பட்டு வருகிறது என்றார். (6)



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி முன்னாள் அதிபர் கிளின்டன் தம்பதியரின் மகள் செல்சியா - மார்க் மெஸ்வின்ஸ்கி ஆகியோர் திருமணம் நடந்தது. திருமணத் தம்பதியருடன் போஸ் தரும் பில் கிளின்டன் தம்பதியர்.

# கிழக்கு மாகாணத்தில் எல்லைகளை மீள்நிர்ணயம் செய்வதில் சர்ச்சை

(கொழும்பு)

கிழக்கு மாகாண எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதுதொடர்பில் ஆரையம்பதி பிரதேச சபைக்கும் காத்தான்குடி நகர சபைக்கும் இடையில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இரண்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையிலான பதற்ற நிலையை தணிக்கும் நோக்கில் கிழக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் விசேட பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளதாகவும் தெரிகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவும் கலந்துகொண்டுள்ளார்.

எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வது குறித்து காணி அளவைப் பணிகள் விரைவில் ஆரம்பிக்க உள்ளதாகவும், இதனால் ஏற்பட்டுள்ள முறுகல் நிலைமைகளுக்கு ஆரம்பத்திலேயே தீர்வு காணப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (6)

# வன்னியில் 10 தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள இளைஞர், யுவதிகளுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கும் நோக்கில் இம்மாத முடிவுக்குள் பத்து தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அதன்படி இப்பிரதேசத்தில் இம்மாத முடிவுக்குள் பத்து தொழிற் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும் அதன் மூலம் ஒரே நேரத்தில் 300 பேருக்கு தொழிற்பயிற்சி வழங்கவும் அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

தொழிற் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கான கட்டடங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபை தெரிவித்துள்ளது. இத்திட்டத்துக்கு கனடா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

வவுனியா, ஓமந்தை பகுதியில் இந்திய அரசாங்கம் சகல வசதிகளையும் கொண்ட தொழிற்பயிற்சி நிலையமொன்றை இரண்டு ஏக்கர் நிலத்தில் அமைப்பதற்கு முன்வந்துள்ளது.

மேலும் மாந்தை கிழக்கு ,பூநகரி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று, மன்னார் மாவட்டத்தில் இரண்டு என பத்து தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தொழிற்பயிற்சி நிலையங்களின் அமைப்புப் பணிகள் பூர்த்தியானதும் உடனடியாக ஆறுமாத கால கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இதில் மேசன், தச்சுத் தொழில், அலுமினியம் பொருத்துதல், வெல்டிங், மோட்டார் சைக்கிள் திருத்துதல், படகுகளில் இணைக்கப்படும் மோட்டார்களைத் திருத்துதல் ஆகிய கற்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கற்கையை மேற்கொள்பவர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா முதல் 200ரூபா வரையிலான கொடுப்பனவும் போக்குவரத்துக்காக சைக்கிள்களும் வழங்கப்படவுள்ளதுடன் தொழில் பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படும்.

ஜப்பான் நாட்டின் ஜய்க்கா நிறுவனமும் சகல வசதிகளையும் கொண்ட தொழிற் பயிற்சி நிலையமொன்றை மன்னாரில் அமைப்பதற்கும் முன்வந்துள்ளது. (6-2)

# தகவல் உரிமை சட்டமூல பிரேரணையை சமர்ப்பிக்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினால் தகவலுக்கான உரிமை எனும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பிரேரணையொன்று இந்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த போது, 2002 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி, மேற்படி சட்டமூலத்தை அறிமுகப்படுத்த முயற்சித்தாகவும் ஆனால் நாடாளுமன்றம் உரிய காலத்திற்கு முன் கலைக்கப்பட்டதால் அதனை செயற்படுத்த முடியாது போனதாகவும் சுட்டிக்காட்டினார். (6-2)

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளை மீள அழைப்பது குறித்து பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இந்தியாவில் சரணாகதி அடைந்துள்ள இலங்கை அகதிகளை மீள அழைப்பது குறித்துப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அகதிகளை மீளவும் அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

போர் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் மீள் குடியேற்றப்பட்டதன் பின்னர் அடுத்த கட்டமாக இந்தியாவில் சரணாகதி அடைந்துள்ள அகதிகள் மீள்குடியேற்றப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியா நலன்புரிநிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை இன்னும் மூன்றுவார காலப்பகுதிக்கு மீள்குடியேற்ற முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளதுடன்,

இந்தியாவிலிருந்து வரும் இலங்கை அகதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட உள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைக்குரிய தீர்வுத்திட்டங்களை முன்வைக்க வேண்டும்

## அகில இலங்கை முஸ்லிம் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைக்கு உரிய தீர்வுத் திட்டங்களை பெற்றுக்கொடுக்க வேண்டுமென அகில இலங்கை முஸ்லிம் கல்விப் பேரவை அறிவித்துள்ளது.

புதிய கல்வி அமைச்சரும், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுத் திட்டங்களை வழங்கத் தவறியுள்ளதாகவும் முஸ்லிம் கல்விப் பிரச்சினை தொடர்பில் கடந்த வரும் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் உரிய தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை எனவும் பேரவை குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும் முஸ்லிம் மாணவர்கள் எதிர்நோக்கி வரும் 45 பிரச்சினைகள் தொடர்பில் 74 பக்க விசேட அறிக்கையொன்று கல்வி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (6)

# வன்னியில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் மும்முரம்

(கொழும்பு)

வன்னியில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. கிராமசேவகர் பிரிவு ரீதியாகப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டும் இவ்விடயம் குறித்து மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டும் பதிவுகள் இடம்பெற்று வருகின்றன.

பொதுமக்கள் தாமதிக்காது பதிவுகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கிளிநொச்சி முல்லைத்தீவு தேர்தல் உதவி ஆணையாளர் த.குருகுலராஜா கேட்டுக்கொள்கின்றார். (6)

# மன்னாரில் டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்தோர் தொகை 5ஆக உயர்வு

(கொழும்பு)

மன்னாரில் கடந்த 10 தினங்களுக்குள் டெங்குக் காய்ச்சலினால் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 7 வயது சிறுவன் உட்பட 4பேர் கடந்த 30 ஆம் திகதி உயிரிழந்தனர்.

இந்நிலையில், நேற்று மன்னார் பெரியகமம் பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரும் உயிரிழந்துள்ளார்.

இவரது தாயார் கடந்த வருடம் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மன்னாரில் டெங்குக் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கு பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் டெங்குக் காய்ச்சல் பரவுவதற்கு காரணமாக இருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# பரீட்சை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதோருக்கு

(கிளிநொச்சி)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான அனுமதி அட்டைகளை நேற்று நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் வி.கே. இரத்தினகுமார் வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இவ்வனுமதி அட்டையைப் பெறாதவர்கள் எதிர்வரும் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக கல்லூரிக்கு வருகை தந்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (6-2)



இலங்கை வங்கியின் 71 ஆவது பிறந்தின நிகழ்வு நேற்று மானிப்பாய் கிளையில் இலங்கை வங்கி கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா தலைமையில் நடைபெற்றது. இதில் வாடிக்கையாளர் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வங்கி முகாமையாளர் க.இலட்சுமணசர்மா நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- நவாலி நிருபர்)

## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் 10ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறவுள்ளது.



இதில் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கைலாச வாகன திருவிழாவும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் 24 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. இதேவேளை ஏனைய மஹோற்சவங்கள் தினமும் காலை 8 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

## இவ்வருட இறுதிக்குள் 40 ஆயிரம் தொன் காபனிய உரத்தை உற்பத்தி செய்ய திட்டம்

இவ்வருட இறுதிக்குள் 40 ஆயிரம் தொன் காபனிய உரத்தை உற்பத்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் காபனிய உரத்தை பாவனையை ஊக்கப்படுத்த கவனம் செலுத்தப்படுவதாகவும் *நாம் வளர்ப்போம், நாட்டைக்கட்டியெழுப்புவோம்* திட்டப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் தேசிய உணவு உற்பத்தி திட்டத்திற்கு என இவ்வருடம் 410 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ஆயிரம் மில்லியன் ரூபாவாகும். உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேற்கூறிய திட்டத்தின் பிர தான செயற்பாடாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக அத்தியாவசிய உணவுப்பொருட்களுக்கான விதை களை இனம் கண்டு அவற்றைப் பயிரிடுவதற்கு தேவையான வசதிகள் விவசாயிகளுக்கு பெற்றுத் தரப்பட்டுள்ளன.

இதன் கீழ் தனியார் வீட்டுத்தோட்டங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் வீட்டுத் தோட்டங்களில் உணவு பயிரிடுதல் ஊக்குவிக்கப்படும் என்று திட்டப்பணிப்பாளர் மேலும் கூறினார்.

காபனிய உரத்தை உற்பத்தி செய்வதுடன் அதன் பாவனையை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 2008 முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் 47 ஆயிரத்து 60 மெற்றிக்தொன் காபனிய உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2010 சிறுபோகத்தின் இறுதி வரை 16 ஆயிரம் மெற்றிக்தொன் காபனிய உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் 40 ஆயிரம் தொன் காபனிய உரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் திட்டப்பணிப்பாளர் மேலும் கூறினார். (6)

## கிளிநொச்சியில் 97 ஆயிரம் பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 97 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். 85 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளுக்கான மீள் குடியேற்றப்பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாளை மேலும் ஒரு தொகுதி மக்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய் யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (6)


ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com
Learn French the French Way French Classes
"ALLIANCE FRANCAISE DE JAFFNA" பிரெஞ்சு தூதரகம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட வடக்கில் உள்ள பிரெஞ்சு மொழி பயிலுவதற்கான ஒரே ஒரு கலாசார மையமாகும்.
கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் French Embassy இன் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது.
மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் எமது நூலகத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்.
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.


## யாழ்ப்பாண மாவட்டத்திற்கு.....

*6 ஆம் பக்கத் தொடர்ச்சி*

**கிளிநொச்சி வலயத்தில் இருந்து தீவக வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வரு மாறு ,**

திருமதி.கே.லுசியாகிறேசி. (கிளி நொச்சி மகா வித்தி), செல்வி ஆர்.புஸ்மலர் (கிளி.அக்கராயன் ஜி.ரி.எம்.எஸ். திருமதி.எஸ். கபிலராணி (கிளி.கரியாழி நாகப்பட்டுவன் இல2 ஜி.ரி. எம்.எஸ்), திரு மதி.ஆர். சிவனேஸ்வரி (கிளி.தம்பிரை ஜி.ரி.எம்.எஸ்),

**துணுக்காய் வலயத்திலிருந்து தீவகவலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

திருமதி.கே.சுகந்தினி (முல்.மல்லாவி மத்திய கல்லூரி), திருமதி.யூ. சசிகலா. (முல். யோகபுரம் மகாவித்தி)

**முல்லைத்தீவு வலயத்திலிருந்து மன்னார் வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

செல்வி.ஏ.பத்மாஜினி (முல். அனிஞ்சியன் குளம் ஜி.ரி.எம்.எஸ்), தவராசா. குயின்ரொன் ராஜ்குமார்(முல். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி),திருமதி.கெ.கலைரஞ்சினி (முல்.கலை மகள் வித்தி

**வலிகாமத்திலிருந்து மன்னார் வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரி யர் விபரம் வருமாறு,**

திருமதி தட்சாயினி (யாழ். ஏழாலை),

**மன்னாரில் இருந்து மடு வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம்,**

கே.ஜோன்சன். (மன்.கோவிற்குளம் ஜி.ரி. எம்.எஸ்),

**முல்லைத்தீவிலிருந்து மடுவலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் பெயர் விபரம் வருமாறு,**

பா. கோரேஸ்டிலான். (முல். வலயக் கல்வி அலுவலம்).

**துணுக்காய் வலயத்திலிருந்து கிளிநொச்சி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி.எஸ்.திருலோகா(முல்.முத்துயங்கட்டு எல்.பி.ஜி.ரி.எம்.எஸ்)

**கிளிநொச்சி வலயத்திலிருந்து முல்லைத்தீவு வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் வருமாறு,**

எம்.உதயகுமார்.( கிளி.எலிபன் பாஸ் ஜி.ரி.எம்.எஸ்)

**கிளிநொச்சி வலயத்திலிருந்து துணுக்காய் வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் வருமாறு,**

திருமதி.பி.சிவநாயகி. (பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தி).

**கிளிநொச்சி வலயத்திலிருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

திருமதி. ஜெ.ஸ்ரீரஞ்சினி.(சென். பாத்திமா ஆர்.சி.ரி.எம்.வி),திருமதி.எஸ் தவலக்சுமி ( கிளி.தமிழ் சோலை வித்தி).

**முல்லைத்தீவு வலயத்திலிருந்து வவுனியாவடக்கிற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் வருமாறு,**

ஜி.சந்திரகுமார். (முல்லை. ஆர்.சி.ரி. எம்.எஸ்).

**துணுக்காய் வலயத்திருந்து வவுனியா வடக்கு வலயத்திற்கு இடம் மாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

திருமதி.ஜெ.ஜெனித்தா.ஜெகதீஸ்வரி (முல்.மாங்குளம் மகா வித்தி),திருமதி. வி.தேவதர்சினி.(முல். திருமுருகண்டி மகா. வித்தி).

**கிளிநொச்சி வலயத்தில் இருந்து வவுனியா தெற்கு வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் விபரம் வருமாறு,**

எ.ரவீந்திரநாதன்(கிளி.இராமநாதபுரம் கிழக்கு ஜி.ரி.எம்.எஸ்) ,திருமதி எஸ்.அமிர்தலட்சுமி (கிளி.புன்னை நீராவி ஜி.ரி.எம்.எஸ்), திருமதி என்.கரோலின் (கிளி.சென்திரேசா மகளிர் கல்லூரி), திருமதி ஜெ.டெனிசியா (கிளி.வட்டக்கச்சி மகா வித்தி), திருமதி எஸ்.கேமலதா (கிளி.முழங்காவில் மகா.வித்தி), திருமதி கே.கிருபாநிதி (கிளி.முருகானந்தா மகா வித்தி).

திருமதி எஸ். மனோரஞ்சி (கிளி.தம்பிராய் ஜி.ரி.எம்.எஸ்), திருமதி ஜெ.பூமாலினி (கிளி.கனகபுரம் மகா வித்தி), திருமதி சி.ரஞ்சினிதேவி (கிளி.பாரதி வித்தியாலயம்),திருமதி எஸ்.ரதீபா (கிளி. சிவபாத கலையம் பாடசாலை), திருமதி ஸ்ரீ.சரஸ்வதி (கிளி.பாலன் ஆர்.சி.ரி.எம். எஸ்), திருமதி சந்திரகுமாரி (கிளி.கோவில் வயர் சி.ரி எம் .எஸ்).

திருமதி ஏ.தயாநிதி (கிளி. கல்மடுநகர் ஜி.ரி.எம்.எஸ்), திருமதி கே.தில்லைநாயகி (கிளி.மத்திய கல்லூரி), திருமதி என்.உதயலீலா (கிளி.சென்தெரேசா மகளிர் கல்லூரி), திருமதி எஸ். வாணி (கிளி.இராமநாதபுரம் மகா வித்தி).

**மடுவலயத்தில் இருந்து வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர் விபரம் வருமாறு,**

திருமதி எஸ். விஜயலட்சுமி (மன்.இலுப்பைக் கடவை ஜி.ரி.எம்.எஸ்)

**முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி கே.அன்னமலர் (முல்லை. கலை மகள் வித்தியாலயம்), செல்வி.க.வசந்த மலர் (முல்லை. குமுழமுனை மகா வித்தி

**துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து வவுனியா தெற்கு கல்வி வலயத்திற்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பெயர் விபரம் வருமாறு,**

திருமதி பி.இராஜலக்சுமி (முல்லை. துணுக்காய் ஆர்.சி.ரி.எம்.எஸ்), திருமதி ஏ. ரேவதி (முல்லை. ஒட்டுசுட்டான் மகா வித்தி, திருமதி ஆர். சர்க்குணதேவி (முல்லை. ஒட்டுசுட்டான் மகா வித்தி

யூ.சின்னத்தம்பி (முல்லை. ஒட்டுசுட்டான் மகா வித்தி), திருமதி என்.சித்திரமேகலை( முல்லை. யோகபுரம் மகாவித்தி), திருமதி ஆர்.சிவலோஜனி( முல்லை . யோகபுரம் மகாவித்தி), திருமதி ரி.சுதாசினி (முல்லை. கொல்லவிலங்குளம் ஜி.ரி.எம்.எஸ்)

## திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

கனடா திரைப்பட இயக்குனர் கலைஞர் திவ்விய ராஜனின் உருவாக்கத்தில் தயாரிக்கப்பட்ட *உறவு* முழு நீள திரைப்படம் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு நாளை புதன்கிழமை பகல் 12 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளது.

அதேவேளை ஏனையோருக்கு எதிர் வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் தேவரையாளி இந்துக்கல்லூரியில் காண்பிக்கப்படவுள்ளது. (4)

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் பாடசாலைகளில் கட்டடப்புனரமைப்பு

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடமாகாண கல்வி அமைச்சின் அறிவு சார் சமூகத்தின் கல்வித்திட்டத்தின் கீழ் 6 பாடசாலைகளில் கட்டடப் புனரமைப்பு மற்றும் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி,புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி,ஸ்கந்தவரோதயாக்கல்லூரி,வரணி மகாவித்தியாலயம் ,சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி,மன்னார் முருங்கன் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கட்டட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.(6)

## கிளிநொச்சி அறநெறி பாடசாலைகள் புனரமைப்பு

கண்டவாளைப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள அறநெறிப்பாடசாலைகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் நந்தவனப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை கட்டடப் புனரமைப்பு வேலைகள் 75ஆயிரம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ,தம்புக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலைக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் பிரிவு ஊடாக இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

நம்முள் எழுகின்ற புத்தெழுச்சிதான் வரலாற்றில் நாம் அடைகின்ற தலைசிறந்த பயன்.
- கெதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்ப் புத்திஜீவிகளே! மௌனம் கலையீரோ!

மானம், மரியாதை, கௌரவம் என எல்லாவற்றையும் இழந்த இனமாக தமிழினம் வாழும் பரிதாபம் துன்பத்துக்குரியது.

எல்லாவற்றையும் இழந்து போனாலும் இழந்தவற்றை எடுத்துக் கூறும் திராணி கூட எம்மிடம் இல்லையென்றால் அந்த இனம் மீட்சி பெறுவதென்பது முடியாத காரியம். இதிலிருந்து தமிழினத்தை காப்பாற்றுவதென்பது ஒவ்வொரு தமிழ் மகனினதும் தலையாய கடமையாகும்.

இருந்தும் எங்கள் இனம் செய்த பாவத்தின் உச்சமாக எங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் எதுவும் பேசத்தெரியாதவர்களாக–சொந்த விடயம் பற்றி கதைக்கும் பரிதாபத்தில் உள்ளனர்.

வன்னிப் பெரு நிலப்பரப்பின் தற்போதைய சூழ்நிலை பற்றி எவரும் கவனம் செலுத்துவதாக இல்லை. நிலைமை இப்படியே இருக்குமாயின் வன்னியில் சிங்களக்கிராமங்களும் அதில் தமிழ் குடிகளும் இருக்கும் கள நிலையே உருவாகும்.

இந் நிலைமை தமிழினத்தின் சாதாரண நிம்மதிக்குக் குந்தகமாக அமையும் என்ற உண்மை உணரப்பட வேண்டும். எனினும் இது பற்றி எங்கள் புத்திஜீவிகள் மௌனமாக இருப்பது வேதனையாகவும் வெட்கமாகவும் அமையும் விடயமாகும்.

சிங்கள புத்திஜீவிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஒன்று சேர்ந்து மிக நுட்பமான ஆலோசனைகளை இலங்கை அரசுக்கு வழங்கிவருகின்றனர்.

அந்த ஆலோசனையின் அடிப்படையில் முறிகண்டிப் பிள்ளையாரும் தன்மானம் இழக்கும் கட்டத்தில் இருக்கிறார்.

ஆனால் எங்கள் புத்திஜீவிகள் எதுவும் தெரியாதவர்களாக–எதுவும் அறியாதவர்களாக இருப்பது ஏன்?

அறிவிலார்க்கு உரைப்பவர் அவர்களிலும் பேதை என்ற தத்துவத்தை நிலை நிறுத்தவா?

அல்லது விடுதலை வேண்டி போராடி வீழ்ந்த பின்பு எது நடந்தாலும் அதனை மௌனமாக ஏற்றுக்கொள்வதே மகாபுத்திசாலித்தனம் என்ற முடிபா?

அன்புக்குரிய தமிழ் புத்திஜீவிகளே! தமிழர் வாழும் உரிமை கேட்கின்றனர். அந்த உரிமையை கௌரவமாக முன்வைக்கும் உரிமை எவருக்கும் உண்டு.

எங்கள் தமிழ் அரசியல் கந்தல் துணியின் கிழிசல் சத்தங்களாக ஒலிக்கின்றன.

அந்தச் சத்தங்கள் துணியில் ஓட்டை தருமேயன்றி தையல் போடாது. ஆகையால் நீங்கள் ஒன்று சேருங்கள். வியூகம் அமையுங்கள்.புதியதோர் பாதையில் பயணம் தொடரட்டும். அறிவால் வெல்வதே பெறுமதியான வெற்றி.

உங்கள் ஆலோசனையில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்று சேரட்டும். ஓரணியில் திரண்டு எங்கள் பிரச்சினையை எடுத்துரைக்கட்டும். அப்போது காரிருள் கலைந்து விடியலுக்கான கதிரவன் முகிழ்ப்பான் என நம்புங்கள். இது சத்தியம்.

# பிரதமருக்கு நிறைவேற்று அதிகாரம் சோசலிச மக்கள் முன்னணி எதிர்ப்பு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து,நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை ஏற்படுத்துவது தொடர்பில் சோசலிச மக்கள் முன்னணிக்குள் பெரும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி ஆகியன இணைந்து சோசலிச மக்கள் முன்னணியை உருவாக்கியுள்ளன. தமது முன்னணிக்குள் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்ற போதிலும் மக்கள் வாக்களித்து தெரிவு செய்யும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை ஏற்படுத்தவேண்டும் என்பதே தனது நிலைப்பாடு என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அதேவேளை சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைக்கு அமைய வெஸ்ட் மினிஸ்டர் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ராஜா கொலுரே தெரிவித்துள்ளார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழித்துவிட்டு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவியை ஏற்படுத்துவதானது இஞ்சியைக் கொடுத்து, மிளகாய் வாங்கியதற்கு ஒப்பானது என லங்கா சமசமாஜ கட்சியின் அரசியல் சபையின் உறுப்பினர் லால் விஜேநாயக்க கூறியுள்ளார். (ச–5)

# 18ஆண்டு கால கிரிக்கெட் வாழ்க்கையில் தமிழன் என்பதால் தடையேதுமில்லை

## சுழல் நாயகன் முரளி பேட்டி

(கொழும்பு)

இலங்கையர் என்று சொல்லிக்கொள்வதில் அதிகம் பெருமை அடைவதாக நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தினால் நடத்தப்பட்ட விசேட கௌரவிப்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட போது முரளிதரன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கட்போட்டிகளில் ஓய்வு பெற்றதன் பின்னர் முத்தையா முரளிதரன் முதல் தடவையாக தொலைக்காட்சி ஊடகமொன்றில் தோன்றி ரசிகர்களுடன் நேரடியாக உரையாடினார்.

30 ஆண்டு காலமாக நாட்டில் நீடித்த பிரச்சினையை முடிபுக்கு கொண்டுவந்த ஜனாதிபதிக்கு தமது விசேட நன்றியை தெரிவிப்பதாக முரளிதரன் தெரிவித்துள்ளார். தமிழர், முஸ்லிம் மற்றும் சிங்களவர் என பிரிவினை பாராட்ட வேண்டிய அவசியம் கிடையாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

18 ஆண்டுகள் இலங்கை அணிக்காக கிரிக்கெட் விளையாடிய தமக்கு எந்த நேரத்திலும் தமிழர் என்பதனால் எவ்வித தடையும் ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சில குறுகிய லாபங்களை அடைய எத்தனிக்கும் ஒரு சக்திகள் தமிழர், சிங்களவர் அல்லது முஸ்லிம் என்பதனை வெளிப்படுத்த முனைகின்றனர்.

பேதங்கள் மறந்து இலங்கையர் என வாழ்வது மிகவும் பயனுடையது.

கல்லூரி விடுதியில் தங்கி படித்த தமக்கு தமிழர், சிங்களவர் அல்லது முஸ்லிம் என பேதம் பாராட்ட தெரியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முரளிதரன் இந்த நேரடி செவ்வியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோர் நேரடியாக தொலைபேசி மூலம் இணைந்து தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் விளையாட்டின்மூலம் தாம் அதிக நண்பர்களை ஈட்டிக்கொண்டதாக முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

முத்தையா முரளிதரனினால் கிரிக்கெட் துறைக்கு ஆற்றப்பட்ட சேவையை கௌரவிக்கும் நோக்கில் பல்லேகலே சர்வதேச விளையாட்டு அரங்கு நேற்று முன்தினம் முதல் முத்தையா முரளிதரன் சர்வதேச கிரிக்கெட் மைதானமாக அழைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். (ச)

# ஊடகவியலாளர் மீது அடக்குமுறை தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் குரல்களை பிரதிபலிக்கின்ற ஊடகங்கள் மீதான அடக்குமுறையின் தொடராக வெற்றி மற்றும் சியத்த ஊடக நிலை யம் மீதான தாக்குதலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் தேசியக்கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

மக்களின் குரல்களைப் பிரதிபலிக்கின்ற ஊடகங்கள்மீதான அடக்குமுறையின் தொடராக வெற்றி மற்றும் சியத்த ஊடக நிலையம் மீதான தாக்குதலை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மிக வன்மையாக கண்டிக்கின்றது.

இலங்கையில் ஊடகங்களும் அவற்றின் ஊடகர்களும் சுதந்திரமாக செயல்படுவதற்கான சூழல் இன்று வரை மறுக்கப்பட்டே வருகின்றது.

போர்க்காலத்தில் ஊடகங்கள் மீதான தாக்குதல்களுக்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டன. ஆனால் வெற்றி மற்றும் சியத்த ஊடக நிலையத்தின் செய்திப்பிரிவின் மீதான தாக்குதலை மேற்கொண்டவர்கள் ஆயுதங்களை வைத்திருக்கின்றனர்.

வெற்றி எப்.எம். செய்திப்பிரிவு மீதான தாக்குதலின்போது பாதிக்கப்பட்ட துணைச் செய்தியாசிரியரும் செய்தியாளரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் இந்தத் தாக்குதலானது தமிழ் ஊடகர்கள் மீதான ஒடுக்குமுறையின் தொடராகவே பார்க்கவேண்டியுள்ளது.

இதே வானொலியின் நிகழ்ச்சி முகாமையாளர் ஏ.ஆர்.வி.லோஷனன் ஏற்கனவே கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்த அதேவேளை குறித்த வானொலியின் செயற்பாட்டாளர்கள் சிலர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே குறித்த ஊடகம் மீதான தாக்குதல் தொடர்பிலான பதிலினை வழங்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கே உள்ளது.

ஜனநாயகம் குறித்து அனைத்து மக்களும் ஒருதாய்ப் பிள்ளைகள் எனவும் தெரிவித்து வருகின்ற அரசாங்கம் கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்ட ஊடகர்களுக்கான இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் இனி வருங்காலங்களிலாவது ஊடகர்களுக்கான அச்சுறுத்தல்களை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று கேட்டுக்கொள்ளும் அதேவேளை உண்மைக்கு குரல் கொடுக்கும் ஊடகர்களுக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்றும் துணைநிற்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றது. என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### தியானம்



கேள்வி:எங்கு ஒருவன் தியானம் செய்ய வேண்டும்? உடலுக்கு உள்ளேயா, வெளி யிலா?

பதில்:உள்ளேயே தியானம் செய்ய வேண்டும். மனம் உள்ளே இழுக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்ற விடயத்தைப் பொறுத்த வரை அந்த மனத்தளத்தை அடையவே நீண்ட காலமாகும். இப்போது நமது போராட்டம் உடம்புதான். தொடர்ந்து அசைவற்று அமரும் நிலையைப் பெற்ற பிறகு, பிறகு மட்டுமே மனத்துடனான போராட்டத்தைத் தொடங்க வேண்டும் .ஆசனம் நிலை பெற்றுவிட்டால் உடல் அசைவற்றிருக்கும். அப்போது விருப்பப்படி நீண்ட நேரம் உட்காரலாம்.



பாடசாலை ரீதியாக மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வு நேற்று கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மாநகரசபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையை ஆரம்பித்து வைப்பதையும் வித்தியாலய அதிபர் எஸ்.ஞானதயாளன் மற்றும் ஆளுநர் ஆகியோர் உரையாற்றுவதையும் பாடசாலைகளுக்கான குப்பைக் கூடையை ஆளுநர் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகத்திடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

## தூக்கத்துக்கும் இதயநோய்க்கும் தொடர்புண்டு - மருத்துவ ஆய்வு தகவல்

தூக்கத்துக்கும் இதய நோய்க்கும் சம்பந்தம் உண்டா? என்பது குறித்து அமெரிக்காவில் உள்ள வெர்ஜினியா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

இந்திய வம்சாவளி விஞ்ஞானியான அனூப்சங்கர் தலைமையில் இந்த ஆய்வு நடந்தது.

30ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் இதய நோய்க்கும், தூக்கத்தும் சம்பந்தம் உண்டு என்று கண்டுபிடிக்கப்பட்டது.

ஒருவர் 7 மணி நேரத்துக்குக் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ தூங்கினால் அவரை இதய நோய் தாக்கும் என்று மருத்துவ ஆய்வு தகவல் கூறியுள்ளது.

7 மணி நேரத்துக்கு குறைவாகத் தூங்கினால் அவர்களுக்கு அதிக அளவில் இதய பாதிப்பு ஏற்படும். 9 மணிநேரத்துக்கு மேல் தூங்கினால் 7 மணிநேரம் தூங்குவதை விட 1 1/2 மடங்கு இதயநோய் பாதிப்பு ஏற்படும். (6)

## இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்கு —தெரிவான மாணவர்களுக்கு—

(யாழ்ப்பாணம்)

2010 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை கெளரவித்து ஆசிவழங்கும் பொருட்டு கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக தேசத்தின் அபிமானம் அமைப்பினரால் எதிர்வரும் 8ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைபவம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

எனவே 2010 ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் அன்றைய தினம்காலை 8.30 மணிக்கு முன்பதாக யாழ். முனியப்பர் ஆலயத்திற்கு முன்பாக வருகைதருமாறு தேசத்தின் அபிமானம் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளதாகவும் 2010 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (6)

## புத்தூர் கிழக்கு மகாத்மாகாந்தி சிக்கன கூ.சங்கம் திறந்து வைப்பு

(புத்தூர்)

புத்தூர் கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் மேம்பாடு கருதி ஜி.ரி.இசற் நிறுவன்த்தின் நிதியுதவியுடனும் மாவட்ட சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடனும் கடந்த 31 ஆம் திகதி புத்தூர் கிழக்கு மகாத்மாகாந்தி சிக்கனக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜி.ரி.இசற் நிறுவனத் திட்ட இணைப்பாளர் திருமதி பிரதாபினி சிக்கனக் கூட்டுறவுச் சங்க சமாச வெளிக்கள உத்தியோகத்தர் திருமதி ரம்மியா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புத்தூர் கிழக்கு கிராம அலுவலர் க.வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்ற சங்கத்துக்கான நிர்வாகத் தெரிவும் நடைபெற்றது.

இதில் தலைவராக நா.பாஸ்கர் செயலாளராக சி.கண்ணதாசன் பொருளாளராக சி.நிரோசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

## இலங்கை இலக்கியப் பேரவை நூல்களுக்கான விருது வழங்கல்

இலங்கை இலக்கியப் பேரவை வருடாவருடம் இலங்கையில் வெளிவரும் சிறுகதை, கவிதை,நாடகம்,சமயம்,சிறுவர் இலக்கியம், பல்துறை, நாவல், காவியம் ,ஆய்வு, மொழிபெயர்ப்பு (வேற்று மொழியிலிருந்து தமிழில்) மேற்படி துறை சார்ந்த நூல்களைத் தெரிவு செய்து விருதுகள் வழங்கி வருகின்றது.

2009 ஆம் ஆண்டில் வெளிவந்த துறை சார்ந்த நூல்களுக்கு விருதுகள் வழங்கப்பட இருப்பதனால் குறிப்பிட்ட ஆண்டில் நூலினை வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பிரதியை விருதின் தேர்வுக்காக எதிர்வரும் 31 ஆம்திகதிக்கு முன்னர் சி. சிவதாசன், செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை, இல.58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு அல்லது அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இதேவேளை நூல்கள் யாவும் இலங்கையில் பிரசுரமானவையாக இருக்க வேண்டும் எனவும் ஏற்கனவே நூலின் பிரதியை அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்ப வேண்டியதில்லை எனவும்இலங்கை இலக்கியப் பேரவைத் தலைவர் தெரிவித்துள்ளார். (6)



பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் எழுதிய "இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திப் பிரச்சினைகள் ஓர் சமகால மீளாய்வு" என்னும் நூல் அறிமுகவிழா நேற்று யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையுரையாற்றுவதையும் பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் நூல் அறிமுகவுரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக முன்னைநாள் கலைப்பீடாதிபதியும் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வரும் நூலாசிரியருமான பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் நூலின் முதற்பிரதியை பேராசிரியர் எஸ்.சத்தியசீலனிடம் கையளிப்பதையும் அருகில் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இந்தியா தொடரை சமன் செய்யுமா?

# மூன்றாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

தோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட்டில் விளையாடிவருகிறது.

காலியில் நடந்த முதல் டெஸ்ட்டில் இலங்கை அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. கொழும்பில் நடந்த 2ஆவது டெஸ்ட் சமநிலையானது.

இந்திய-இலங்கை அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று ஆரம்பமாகிறது. இதற்கு இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

டெஸ்ட் தொடரை சமன் செய்ய இந்த டெஸ்ட்டில் வெற்றிபெறவேண்டிய நெருக்கடி இந்திய அணிக்கு உள்ளது. இதனால் இந்திய வீரர்கள் அனைவரும் முழு திறமையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்திய அணி துடுப்பாட்டத்தில் வலுவாக வுள்ளது. ஆனால் பந்துவீச்சு தான் தொடர்ந்து கவலை அளிக்கும் வகையில் உள்ளது. சகீர் கான், சிறிசாந் இல்லாததால் வேகப்பந்து இந்தியாவின் நிலை பரிதாபமாக உள்ளது.

மேலும் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் ஹர்பயன் சிங்கால் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. 3 வேகப்பந்து வீரர் அல்லது 2 வேகப்பந்து வீரர் 2 சுழல்பந்து வீரர் என்ற நிலையில் களமிறங்கும்.

முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக 2 ஆவது டெஸ்ட்டில் விளையாடாத காம்பீர் இன்றய டெஸ்ட்டில் இடம்பெறுவார். தமிழக வீரர் விஜய் கழற்றி விடப்படுவார்.

யுவராஜ் சிங் காய்ச்சல் காரணமாக 2 ஆவது டெஸ்ட்டில் ஆடவில்லை. அவர் தற்போது உடற்தகுதியுடன் இருந்தாலும் இன்றைய டெஸ்ட்டில் இடம்பெறுவதற்கான வாய்ப்பு குறைவே.

காரணம் அவருக்கு பதிலாக ஆடிய சுரேஷ் ரெய்னா அறிமுக டெஸ்ட்டிலேயே சதம் அடித்து முத்திரை பதித்தார். இதனால் யுவராஜ் சிங்கை விட ரெய்னாவே தேர்வு பெற அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

முன்னணி துடுப்பாட்ட வீரர்களான ராகுல் டிராவிட், லக்ஸ்மன் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இன்றைய டெஸ்ட்டில் அவர்கள் திறமையை நிரூபிக்கவேண்டிய நிலையில் உள்ளனர். டெண்டுல்கரும், சேவாக்கும் தொடர்ந்து நல்லநிலையில் உள்ளனர்.

இலங்கை அணியை பொறுத்தவரை சமநிலை செய்தாலே தொடரை வென்றுவிடும். துடுப்பாட்டத்தில் பரணவிதான, அணித்தலை வர் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தனா ஆகி யோர் சிறப்பாக உள்ளனர்.

காயம் காரணமாக 2 ஆவது டெஸ்ட்டில் விளையாடாத இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீரர் மலிங்க 3 ஆவது டெஸ்ட்டில் ஆடுகிறார்.

அவரது வருகை இலங்கை அணிக்கு கூடுதல் பலம் என்பதில் சந்தேகம் இல்லை.

இரு அணிகளும் இன்று மோதுவது 35 ஆவது டெஸ்ட் ஆகும்.

இதுவரை நடந்த 34 டெஸ்ட்டில் இந்தியா 13 போட்டியிலும் இலங்கை 06 போட்டியிலும் வெற்றி பெற்றன. 15 டெஸ்ட் சமனிலையை அடைந்தது.

இப்போட்டி இலங்கை நேரப்படி காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.



## சச்சினின் புகழுக்கு புதிய மகுடம்




சச்சின் டெண்டுல்கரின் புகழுக்கு புதிய மகுடமாக அதிக டெஸ்ட் போட்டிகள் விளையாடிய வீரர் என்ற சாதனையை இன்று நிகழ்த்தவிருக்கிறார்.

இந்தியா- இலங்கை இடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி இன்று கொழும்பில் தொடங்குகிறது.

இந்தப்போட்டியில் விளையாடுவதன் மூலம் அதிக டெஸ்ட் போட்டியில் பங்கேற்ற வீரர் என்ற அவுஸ்திரேலிய முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவோவின் சாதனையை டெண்டுல்கர் முறியடிக்கிறார்.

சச்சின் டெண்டுல்கருக்கு இது 169 ஆவது டெஸ்ட் போட்டியாகும். ஸ்டீவோ 168 டெஸ்டில் விளையாடியதே முந்தைய சாதனையாகும்.

இதுவரை 442 சர்வதேச ஒருநாள் கிரிக்கட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின் இன்னும் மூன்று போட்டிகள் விளையாடினால் இலங்கை அணியின் ஜெயசூரியா வசமுள்ள 444 போட்டி என்ற சாதனையையும் எட்டிவிடுவார்.

சச்சின் டெண்டுல்கர் இதுவரை 168 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 13 ஆயிரத்து 742 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இதில் 48 சதங்களும் 55 அரைச்சதங்களும் அடங்கும்.

அண்மையில் வயது குறித்த கேள்வி எழுந்தபோது உடலளவிலும் மனதளவிலும் உறுதியாக இருக்கும்போது விளையாட்டில் வயது ஒரு தடையில்லை.

கிரிக்கெட்டிலும் வயது பற்றி பேசுவதை எல்ரோரும் நிறுத்தவேண்டும் என விரும்புகிறேன்.

37 வயதில் டெஸ்ட்டில் என்னால் இரட்டைச் சதம் அடிக்க முடிந்திருக்கும் போது வயது ஒரு விடயமே இல்லை என்றே கருதுகிறேன் என்றார் சச்சின் டெண்டுல்கர்.

## டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசையில் குமார் சங்கக்கார முதலிடம் பிடித்தார்



(டுபாய்)

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப்பட்டியலில் இந்திய வீரர் சேவாக் நம்பர்-1 இடத்தை இழந்தார். இவர் இரண்டாவது இடத்துக்கு பின்தங்கினார். இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்காரா நம்பர்-1 இடத்துக்கு முன்னேறினார்.

டெஸ்ட் அரங்கில் சிறந்துவிளங்கும் வீரர்களுக்கான புதிய தரவரிசைப்பட்டியலை சர்வதேச கிரிகெட் சபை (ஐ.சி.சி) டுபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் சேவாக் (863 புள்ளி), முதலிடத்திலிருந்து 2 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். கொழும்பு டெஸ்ட்டில் இரட்டை சதமடித்து அசத்திய இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்காரா (882 புள்ளிகளுடன்) 2 ஆவது முறையாக நம்பர்-1 இடத்துக்கு முன்னேறினார். முன்னதாக கடந்த 2009 இல் முதலிடம் பெற்றார்.

### சச்சின் முன்னேற்றம்

கொழும்பு டெஸ்ட்டில் இரட்டை சதமடித்த இந்திய நட்சத்திர துடுப்பாட்டவீரர் சச்சின் 6 ஆவது இடத்திலிருந்து 4 ஆவது இடத்துக்கு முன்னேறினார். தனது முதல் டெஸ்ட் போட்டியில் சதமடித்து அசத்திய இந்திய துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா 60 ஆவது இடம் பிடித்தார்.

### அன்டர்சன் எழுச்சி

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் டேல்ஸ்டைன் 887 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளாார்.

இவரை அடுத்து பாகிஸ்தானின் முகமட் ஆசிப் (818 புள்ளி) இலங்கையின் முத்தையா முரளிதரன் (764 புள்ளி) உள்ளனர். இந்தியா சார்பில் சாகீர் கான் (8 ஆவது) ஹர்பஜன் சிங் (9 ஆவது) உள்ளிட்டோர் முதல் 10 வரிசையல் நீடிக்கின்றனர்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் வேகத்தில் மிரட்டிய அன்டர்சன் 4 இடம் முன்னேறி 5 ஆவது இடம் பிடித்தார்.







2011ஆம் ஆண்டு இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணக்கிரிக்கெட் தொடருக்கான இலட்சினை நேற்று இலங்கையில் வெளியிடப்பட்டது. இதில் இந்திய-இலங்கை அணியின் மூத்த வீரர்களிடம் 2011 உலகக் கிண்ணக் கிரிக்கெட் குழுவின் தலைவர் செட்டி இலட்சினையை வெளியிடுவதை படத்தில் காணலாம்.

# வடக்கில் 10 ஆயிரம் பேருக்கு முழுநேர வேலைவாய்ப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் 10 ஆயிரம் பேருக்கு முழு நேர வேலை வாய்ப்புகளை வழங்கப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. யூ.எஸ்.எயிட் மற்றும் இலங்கையைச் சேர்ந்த நான்கு நிறுவனங்கள் இணைந்தே இந்த வேலைவாய்ப்புகளை வட பகுதி மக்களுக்கு வழங்க முன்வந்துள்ளன.

இது தவிர வட மாகாண மக்களுக்கு பல துறைகளில் பயிற்சிகளும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக யூ.எஸ். எயிட்110 கோடி ரூபாயை முதலீடு செய்கிறது.மேலும் 290 கோடி ரூபாயை தனியார் நிறுவனங்கள் இணைந்து முதலீடு செய்ய முன்வந்துள்ளன.

அமெரிக்க தூதுவராலய அறிக்கையின் படி வட மாகாண மக்களின் நலனுக்காக மொத்தமாக இந்த திட்டத்தின் கீழ் 400 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ச-5)

# மாகோஸ் வாரம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வணிக முகாமைத்துவப் பீடத்தின் வாரமாகிய மாகோஸ் வாரம் நேற்று காலை 9 மணி முதல் ஆரம்பமாகியது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொண்டார்.நிகழ்ச்சிகளின் முதல் நிகழ்ச்சியாக விரிவுரையாளர்கள் மற்றும் இறுதி வருட மாணவர்களுக்கான இருபது-20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து இரண்டு வாரங்களாக நடைபெறவுள்ள மேற்படி வாரத்தில் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் இதர போட்டிகளும் நடை பெறவுள்ளன.

மாகோஸ் வாரத்தின் பரிசளிப்பு விழா நிகழ்வுகள் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

(ச-5)

# இராஜினாமாச் செய்யப் போவதாக பல்கலை அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

பல்கலைக் கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் ஓகஸ்ட் 16ஆம் திகதியுடன் தமது பதவிகளை இராஜினாமாச் செய்யப் போவதாக பல்கலைக்கழக உபவேந்தர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான பல்கலைக்கழக திணைக்களங்களின் தலைவர்கள், உபவேந்தர்கள் ஆகியோர் தொண்டர் அடிப்படையில் பணியாற்றுவதாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

தொண்டர் அடிப்படையிலான உத்தியோகஸ்தர்களின் பங்களிப்பு இல்லா விட்டால் பல்கலைக்கழக முறைமையை இயக்குவது கடினமானது அவர் கூறியுள்ளார்.

குறுகிய காலத் தீர்வாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி 25 சதவீத சம்பள உயர்வு வழங்குமாறு கோரி பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் கடந்த செவ்வாய்கிழமை அடையாள வேலைநிறுத்தமொன்றை நடத்தியது.

எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை கடமைக்குச் செல்லாதவர்களுக்கு சம்பளம் வெட்டப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தலைமையிலான உயர்கல்வி அமைச்சு பிரதிநிதிகளுக்கும் இடையில் இன்று மாலை பேச்சுவார்த்தையொன்று நடைபெற்றுள்ளது. (ச-5)

## ஐ.நா...

தடவையாகும்.

ஐ.நாவின் பொதுச்சபை அடுத்த மாதம் நியூயோர்க்கில் கூடுகின்றது. இப் பொதுச்சபை கூட்ட விவாதத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பங்கேற்கின்றார்.

அதற்காகவே அவரும் குழுவினரும் இவ் விஜயத்தை மேற்கொள்கின்றார்கள். இதேவேளை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் இந்த நிபுணர் குழுவுக்கு இலங்கை அரசாங்கம் ஆட்சேபனை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 4 இலட்சம் சிங்கள மக்களை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது வன்னிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்குள்ள யதார்த்த நிலைமைகளையும் அங்குள்ள மக்களின் பிரச்சினைகளையும் நேரில் பார்த்தும் கேட்டறிந்தும் கொண்டது.

ஜூலை மாதம் 26 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிளிநொச்சியின் சாந்தபுரம் கிராமத்திற்குச் சென்று அங்கு இடைத்தங்கல் முகாமில் வசிக்கும் அந்தக் கிராமத்தின் மக்களைச் சந்தித்து அங்குள்ள நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது அங்கு எவ்வாறான நிலைமைகள் காணப்பட்டது என அங்குள்ள நிலைமைகளைத் தெளிவுபடுத்தும் முகமாகக் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ரேணுகா விடுதியில் நேற்று நண்பகல் செய்தியாளர் மாநாடு ஒன்று நடைபெற்றது.

இந்த செய்தியாளர் மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வன்னியில் அவதானித்தவற்றைத் தெளிவுபடுத்தினர். இதன் போது வன்னி மக்களின் நிலைமையினை வெளிப்படுத்தும் முகமாக அங்கு எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் ஊடகங்களுக்கு வழங்கினர்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அங்கு தெரிவித்ததாவது,

இலங்கையில் உண்மையில் ஒரு முறையான அரசியல் ரீதியான தீர்வினை முன் வைப்பது தொடர்பில் அரசாங்கம் ஒழுங்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை முன்கொண்டு செல்ல வேண்டும்.

தாம் முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். தொடர்ந்தும் பேசவிருக்கின்றோம். ஏனைய தமிழ்க் கட்சிகளின் கொள்கை, தமிழ் மக்களுக்கு நன்மை சேர்க்கும் என்பது வெளிப்பட்டால், அவர்களுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றோம்.

தற்போது வன்னியில் மீள்குடியேற முடியாத நிலையில் இருக்கின்ற மக்கள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இந்த அரசாங்கமும் என்ன முடிவை எடுத்திருக்கின்றார்கள்?

அவ்வாறு தீர்மானம் ஒன்றை மேற்கொண்டிருந்தால், அது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்குமா? அது தொடர்பில் ஜனாதிபதியுடன் பேசியிருக்கின்றார்களா? ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொண்டிருக்கின்றார்களா? என கேள்வி எழுப்பிய சுரேஸ் பிரேமச்சந்திரன்,

அவ்வாறு ஆக்கபூர்வமான தீர்மானம் ஒன்று எடுத்தது, சரியான வழியில் அந்த அரங்கம் செல்லுமாக இருந்தால் அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இதேவேளை மீள்குடியேற்றத்தின் அடிப்படையில் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் செல்ல முடியாதுள்ளது.

அண்மையில் "வன்னிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்த நாங்கள், எங்களது விஜயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தோம்.

அதன்போது வன்னியில் பல பிரதேசங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக ஜனாதிபதியின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கூரைத் தகடுகள் வந்ததன் பின்னர் அந்த மக்களை மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ உறுதியளித்திருந்த போதும் இதுவரையில் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் வரவுள்ள இந்தியச் சிறப்புத்தூதுவர் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர்,பாதிக்கப்பட்ட மக்களையும் பிரதேசங்களையும் இலங்கை அரசாங்கத்தின் வழிகாட்டலின்றி நேரடியாகச் சென்று பார்வையிட வேண்டும் எனக் கோரியிருக்கின்றார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள மற்றும் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகள், இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பகுதிகளை அவர் இந்தியத் தூதரகத்தின் துணையினை மாத்திரம் கொண்டு நேரடியாகச் சென்று பார்வையிடுவாராக இருந்தால், அதனை நாம் வரவேற்போம்.

இதற்கிடையில் வடக்கில் தமிழ் மக்கள் சொந்த இடங்களில் குடியேற்றப்படுவர் என ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்திருந்த போதும், கண்டியில் மகாநாயக்க தேரரைச் சந்தித்து வட மாகாணத்தில் இராணுவத்தினரைக் குடியேற்றவிருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

இது வடக்கில் இராணுவத்தினரின் ஊடாக சுமார் 4 இலட்சம் சிங்களவர்களைக் குடியேற்றுவதற்கான முயற்சி. இலங்கை அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இந்தியாவுக்கும் வழங்கிய உறுதிமொழியைத் தற்போது மீறி வருகின்றனர் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஏ. சுமந்திரன்,

வலிகாமம் வடக்குப் பகுதி உள்ளிட்ட பாரிய நிலப்பரப்பைக் காரணமின்றி அதியுயர் பாதுகாப்பு வலயமாகத் தொடர்ந்தும் தக்க வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் என்னவென வினவினார்.

இது தொடர்பில் அரசாங்கத்துடன் கடந்த ஜூன் மாதம் 7 ஆம் திகதி ஜனாதிபதியுடன் பேசியபோது எடுத்துரைத்ததாகவும் எனினும் இதுவரையில் மந்த நிலையிலேயே நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ச-3,5)

## தர்சிகா...

ருடன் தர்சிகாவின் உள் உறுப்புகள் நேற்று மாலை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதேவேளை மரணமான தர்சிகாவின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்குமாறு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அரச சுகாதார உத்தியோகத்தர் சங்கம் மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கடமை நேரத்தில் குறித்த மரணம் நிகழ்ந்துள்ளது. அது மட்டுமன்றி குறித்த மருத்துவமாதுவின் வருமானத்திலேயே அவரது குடும்பம் தங்கியிருந்தது.

தற்போது அவரது இழப்பால் அவரது குடும்பம் மிகவும் நொந்துபோயுள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## பொன்...

ரையொருவர் ஒரு மணித்தியாலம் வரை சந்தித்து இவ் வழக்கு சம்பந்தமாக உரையாட இந் நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கோரினார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் கூட உறவினர்களுடன் உரையாடுகின்றமைக்கு அனுமதிக்கப்படுகின்றனர். எனவே இந் நீதிமன்ற வளாகத்திலோ, பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கடற்படை தலைமை காரியாலயத்திலோ இருவரும் சந்தித்து உரையாட அனுமதிக்க வேண்டும் என அவர் தனது மனுவில் கோரினார்.

ஆனால் சட்ட மாஅதிபரின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட அரச சட்டவாதி தமித் தோட்டவத்த இந்த அனுமதியை நீதிமன்றம் வழங்கவே கூடாது என்றார்.

அதற்கு சட்டத்தில் இடமில்லை என்றும் கூறினார். அப்போதே வழக்கை நடத்தாமலேயே அவரது கட்சிக்காரர்கள் இருவரையும் தூக்கில் போட சட்டமா அதிபர் முயற்சிக்கின்றார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி பதிலுக்கு சொன்னார்.

இவ் வழக்கை விசாரித்த கொழும்பு பிரதான நீதிவான் ரஸ்மி சிங்கப்புலி இச் சந்தேக நபர்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

இவ் வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ச)

## நிபுணர்...

கள் சபையினால் கடந்த மாதம் அமைக்கப்பட்ட இந்தக் குழு இந்த மாதம் தனது பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்தது.

நான்கு மாதம் என அதன் செயற்றிட்டம் திட்டமிடப்பட்டிருந்தது எனினும் அது முழுமையான அளவிலான அதிகாரிகள் நியமிக்கப்படும் வரை அது தனது பணிகளை ஆரம்பிக்க மாட்டாது என ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஏ)


## ஓராண்டு நினைவலைகள்

அன்னை மடியில் | ஆண்டவன் அடியில்

18 • 07 • 1936 | 13 • 08 • 2009



**அமரர் சுப்பையா வைத்திலிங்கம்**

அன்பான அப்பாவே எமக்கு உயிரூட்டி ஒளியூட்டி வழிகாட்டி
பார்போற்ற வாழ வைத்த தெய்வமே
ஓராண்டு சென்றாலென்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலென்ன
உங்கள் அன்பு முகம் எங்களை விட்டு எப்பொழுதும் நீங்காது எம் தந்தையே
வேண்டுகின்றோம் இறைவனடி உங்கள் நினைவுக்காய்

S.V.T. கோபுரம் அரிசிக் களஞ்சியம்,
இணுவில்.

- குடும்பத்தினர்

(2067)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.